தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சின்ன சின்ன செய்திகள்



**ஏற்றுமதிக்கேற்ற முருங்கை சாகுபடி:** கடலூர் மாவட்டம், அண்ணா கிராமம் ஒன்றியம் பண்ருட்டிக்கு அருகில் உள்ள ஒறையூரைச் சேர்ந்த அய்யப்பன் பல ஆண்டுகளாக முருங்கை சாகுபடி செய்கிற அனுபவத்தை விவரிக்கிறார். செடி முருங்கையை பொறுத்தமட்டில் விதைகளை அவரே தயார் செய்கிறார். தரமான மற்றும் அதிகப்படியான காய்கள் கொண்ட மரத்தை தேர்வு செய்து அதில் அடிக்கிளையில் காய்க்கும் காய்களை விட்டு விட்டு பிற காய்களை முற்ற விட்டு, நன்கு காயவைத்து நல்ல வீரியமான விதைகளைப் பிரித்து எடுக்கிறார். மண்புழு உரத்தை மண்மணலோடு கலந்து பாக்கெட் போட்டு, ஒரு பாக்கெட்டுக்கு 2 விதைகளை விதைத்து, 15-20 நாட்களுக்குள்ளாக எடுத்து செடியை நட்டு விடுகிறார். நிலத்தை உழுது சமப்படுத்தி 8 அடிக்கு 6 அடி இடைவெளியில் 1 அடி ஆழமுள்ள குழிகளைத் தோண்டி, மேல் மண்ணால் மூடி 2 செடிகளை நட வேண்டும்.முருங்கைக்கு பொதுவாக

அதிகமாக தண்ணீர் தேவை இருக்காது. வாரம் ஒருமுறை 2 மணி நேரம் சொட்டுநீர்ப் பாசனம் செய்தால் போதும். உரம் மருந்து போன்றவற்றையும், டிரிப் மூலமாகவே கொடுத்திடலாம். செடி வெச்சு 4 மாதம் கழித்து டி.ஏ.பி.யை செடிக்கு 100 கிராம் அளவுக்கு செடியைச் சுற்றி குழியைப் பறித்து வைக்க வேண்டும். 19:19:19 என்ற கலப்பு உரத்தை ஏக்கருக்கு 2 கிலோ அளவில் வாரத்திற்கு ஒருமுறை கொடுக்கனும்.

பூ எடுக்கும் வரைக்கும் ஈரத்தன்மை அதிகமாக இருக்கக் கூடாது. பூக்கும் தருணத்தில் சைட்டோசைம் இலைவழி திரவத்தை கொடுக்கனும். பூ பூக்கறதுக்கும், காய்ப்பிடிப்பதற்குமான மருந்துகளை 15 நாள் இடைவெளியில் அடிச்சிட்டே வரனும். காய்ப்புழுவிற்கு இமாமெக்டின் பென்சோயேட் மருந்தை சரியான நேரத்தில் அடிக்கனும். சொட்டுநீர்ப்பாசனம், வேர்வழி உரம், வளர்ச்சி ஊக்கிகள், நுண்ணூட்டச்சத்து உரங்கள் பயோ ஆர்கானிக்ஸ் ஆகியவற்றை கொடுப்பதால் தொடர் விளைச்சலுக்கும், பசுமை மாறா காய்களை ஏற்றுமதி சந்தைக்கு அனுப்புவதற்கு உண்டான வெற்றி சூத்திரங்கள் என குறிப்பிடுகிறார் அனுபவ விவசாயி. மேலும் விபரங்களுக்கு : சி.அய்யப்பன், ஒறையூர். அலைபேசி: 93676 46167.**சின்ன வெங்காயத்தில் அதிக லாபம் பெற**: விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நாச்சியார்பட்டி கிராமத்திலிருக்கும் விவசாயி ராஜேஸ்குமார் 60 சென்டு நிலத்தில் 70 நாட்களில் 90 ஆயிரம் ரூபாய் வரை லாபம் எடுத்திருக்கிறார். சின்ன வெங்காயத்திற்கு சம்பா பட்டம் (ஆனி முதல் ஆவணி வரையும், குறுவைப்பட்டத்திற்கு ஐப்பசி முதல் தை மாதம் வரை) ஆகிய இரண்டு பட்டங்களும் சிறந்தவை.குறுவைக்கு புரட்டாசி மாதக் கடைசியில் ஆட்டுக்கிடை அமைத்து காய விடலாம். சம்பா சாகுபடிக்கு ஆனி மாதமும் குறுவைக்கு ஐப்பசி மாதமும் ஓர் உழவு அடித்து விட்டு உழவித்த அன்றே

10 அடி நீளம், 5 அடி அகலத்தில் பாத்திகள் அமைக்க வேண்டும். 60 சென்ட் நிலத்திற்கு 250 பாத்திகள் வரை வரும். பாத்தி எடுத்த உடனே தண்ணீர் பாய்ச்சி, தலைப்பகுதி மேலே இருக்குமாறு வெங்காயத்தின் முக்கால் பகுதியை மண்ணுக்குள் புதைத்து நடவு செய்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

வெங்காயத்திற்கு விலை இல்லாத வேளையில் பட்டறை அமைத்து சேமித்து வைக்கலாம். கிழக்கு மேற்காகத்தான் பட்டறை அமைக்க வேண்டும். மர நிழலில் பட்டறை அமைத்தால் நல்லது. தரையிலிருந்து ஒரு அடி உயரத்தில் செங்கல் வைத்து அடுக்கி, அதன் மேல் இரண்டரை அடி அகலத்தில் தேவைக்கேற்ற நீளத்தில் அகத்திக் கம்புகளை குறுக்கும் நெடுக்குமாக அடுக்க வேண்டும். அதன் மீது காய்ந்த நாற்று, தென்னங்கீற்று அல்லது பனை ஓலையைப் போட வேண்டும். வெங்காயத்தை அறுவடை செய்த உடனேயே பட்டறையில் வைக்க கூடாது. அறுவடை செய்த 45 நாட்கள் களத்திலேயே காயவிட்டு முதல் நாள் முக்கால் அடி, 2வது நாள் 2 அடி என கொஞ்சம் கொஞ்சமாக எடை ஏற்ற வேண்டும். 2 அடி உயரம் வரை மட்டமாக அடுக்கி விட்டு 2 அடிக்கு மேல் கூம்பு வடிவில் அடுக்க வேண்டும். பட்டறையில் அடுக்கி முடித்த பிறகு, வெங்காயத்தின் மீது பனை ஓலை அல்லது சாக்கு போட்டு மூட வேண்டும். இந்தப் பட்டறையில் 7 மாதங்கள் வரை வெங்காயத்தைச் சேமித்து வைக்கலாம். தொடர்புக்கு: ராஜேஷ்குமார், அலைபேசி: 99527 11002.

## இளங்கோழிக் குஞ்சுகள் பராமரிப்பு

8000 ஆண்டுகளுக்கு முன்பே வீடுகளில் நாட்டுக் கோழிகள் வளர்க்கப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரம் உள்ளது. ஆனால் இன்று பல நோய்களால் குஞ்சுகளிலேயே இறந்து விடுகின்ற சதவீதம் அதிகரித்து விட்டது. இன்று நல்ல வருமானம் தரக்கூடிய இத்தொழிலில் முக்கிய

விஷயம் இளங்கோழிக் குஞ்சுகளின் பராமரிப்பு ஆகும். கோழிக் குஞ்சுகள் வருவதற்கு 15-20 நாட்களுக்கு முன் கொட்டகைகளை சீரமைத்து சுத்தம் செய்ய வேண்டும். ஆழ் கூழங்களை அப்புறப்படுத்தி, தண்ணீரினால் கிருமி நாசினிகள் கொண்டு இரண்டு அல்லது மூன்று முறைகள் நன்கு சுத்தம் செய்ய வேண்டும். ஆழ் கூழ் பொருட்களான உமி, மரத்தூள், கடலை பொக்கு, தேங்காய் மஞ்சு போன்றவற்றை வாங்கி, கிருமி நாசினி கொண்டு (பார்மலின்) தெளித்து அதனைக் கொட்டகையில் வைக்க வேண்டும்.

**இயற்கை முறை அடை காப்பான் முறை:** தன் குஞ்சுகளுக்கு கோழிகளே தேவையான வெப்பம் தரும். 15 முதல் 20 குஞ்சுகளை உடல் பருமன் பொறுத்து கோழி அடை காக்கும். இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை தீவனக் கலவையாகவோ அல்லது குருணை தீவனமாகவோ குஞ்சுகளுக்கு அளிக்க வேண்டும்.**செயற்கை முறை அடைகாப்பான் முறை:** செயற்கையாக அடை காக்கும் இயந்திரங்கள் பல அளவுகளில் பல வகைகளில் வந்து விட்டன. அவற்றை (தரமான) பயன்படுத்தியும் அடை வைக்கலாம். அடைகாப்பானை கோழிக் கொட்டகையின் ஒரு பகுதியில் ஏற்பாடு செய்யலாம். நாம் எத்தனை குஞ்சுகளை வளர்க்க இருக்கிறோம் என்பதற்கு ஏற்றபடி இடம் தேர்வு செய்ய வேண்டும். குஞ்சுகள் வந்ததும் தீவனம், தண்ணீர் கொடுப்பதில் கவனமாக, விஞ்ஞான முறையில் கொடுத்து வர வேண்டும். அவற்றுக்கு தேவையான சூடு (வெப்பம்) சரியான அளவு கொடுக்க வேண்டும். மின்விளக்கு அல்லது எரிதண்டின் மூலம் அல்லது மரக்கரி அடுப்பு மூலம் வெப்பம் அளவோடு தர வேண்டும். கழிவுகளை மூன்று நாட்களுக்கு ஒருமுறை அகற்ற வேண்டும். அதிக கவனமாக வளர்த்தால் இறப்பினை தவிர்க்கலாம்.கீழ்க்கண்டவலைத்தளங்களைபாருங்கள். www.tanuvas.org .in, www.nabard.org. www.farmforward.com, www.extension.4mn.edup

outtry,www.rodeleinstitute.org.- எம்.ஞானசேகர், தொழில் ஆலோசகர், 93807 55629.

## பட்டுக்கூடு உற்பத்தியில் அசத்தும் மதுரை விவசாயி



மதுரையில் பட்டுப்புழு வளர்ப்பு விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே உள்ளது. நெல், கரும்புக்கு புகழ்பெற்ற சோழவந்தானில் மாற்றுத்தொழிலாக மன்னாடிமங்களம் விவசாயி ஜி.முருகன், பட்டுப்புழு வளர்ப்பில் ஆர்வம் காட்டி வருகிறார். பாரம்பரியமாக நெல், கரும்பு, தென்னை, வாழை விவசாயத்தில் ஈடுபட்டு வந்த முருகனுக்கு, பட்டுப்புழு வளர்ப்பில் ஆர்வம் ஏற்பட்டது பலருக்கு ஆச்சரியம். **முருகன் கூறியதாவது**: நெல், கரும்பு, தென்னை, வாழைக்கு தண்ணீர் அதிகம் தேவை. சோழவந்தானில் தண்ணீருக்கு பஞ்சமில்லை. ஆனால் விவசாயப்பணிக்கு தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. காரணம் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் அமலானதில் இருந்து விவசாயிகள் படும்பாடு சொல்லி மாளாது. இதன் காரணமாகவே மாற்றுத்தொழிலுக்கு மாற வேண்டிய கட்டாயம் பலருக்கு ஏற்பட்டது. எனினும் பலர் தயங்கினர்.நான், துணிச்சலுடன் களத்தில் இறங்கினேன். விளைவு கைமேல் பலன் கிடைத்து வருகிறது. திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டில் இளம் புழு வளர்ப்பு மையம் உள்ளது. இங்கிருந்து "டபுள் ஹைபிரிடு' ரகத்தை சேர்ந்த பட்டுப்புழுக்கள் வாங்குகிறேன்.

மஞ்சள் நிற பட்டுக்கூடு, வெள்ளை நிற பட்டுக்கூடு என இரு வகை உண்டு. வெள்ளை கூடு ஜப்பான் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. தலைமுடி அளவு மட்டுமே புழுக்கள் இருக்கும். இறுதியாக பத்தாயிரம் மடங்கு வளர்ச்சி பெறும். பட்டுப்புழுக்களுக்கு முக்கிய உணவு "வி1' இனத்தை சேர்ந்த மல்பரி இலை. இச்செடியை நடவு செய்து 53 வது நாளில் இருந்து தொடர்ந்து 15 ஆண்டுகளுக்கு பலன் தரும். நெல் விவசாயத்தில் அதிகபட்சம் மூன்று போக விளைச்சல். பட்டுப்புழுக்கள் வளர்ப்பு மூலம் பட்டுக்கூடு ஆண்டுக்கு ஐந்து முறை கிடைக்கும். இது ஐந்து போக விளைச்சலுக்கு சமம். மதுரை சமயநல்லூரில் மத்திய பட்டு வாரியம் மூலம் மானியத்துடன் கூடிய வெள்ளை நிற பட்டுப்புழு வளர்ப்பில் இரண்டு ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறேன். சொந்த நிலத்தில் மூன்று ஏக்கரில் தரமான மல்பரி செடிகளை வளர்க்கிறேன். காலை, மாலை, இரவு என மூன்று வேளைகள் புழுக்களுக்கு இலை வைக்க வேண்டும். ஒரு கூட்டின் எடை 2 கிராம் வரை இருக்கும். 45 நாட்களுக்கு ஒரு முறை 250 கிலோ வரை பட்டுக்கூடு கிடைக்கும். 100 சதுர அடி பரப்பளவில் வளரும் புழுக்கள் படிப்படியாக 4 ஆயிரம் சதுர அடிக்கு பரவும். ஷெட் அமைக்கவும் மானியம் உண்டு. முறையாக பராமரித்தால் ஆண்டுக்கு பத்து முறை பட்டுக்கூடுகள் கிடைக்கும் என்றார். தொடர்புக்கு 94431 09451.

## 82,000 டன் பறிமுதல்: பருப்பு விலை குறைகிறது



புதுடில்லி: நாடு முழுதும், பதுக்கல்காரர்களிடமிருந்து, 82 ஆயிரம் டன் பருப்புகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதையடுத்து, அவற்றின் விலை குறைய தொடங்கியுள்ளன.நாடு முழுதும், துவரம், உளுத்தம் பருப்புகளின் விலை, மிக கடுமையாக உயர்ந்துள்ளன. இரண்டு பருப்புகளும், கிலோ ரூ.200க்கும் அதிகமாக விற்கப்படுகிறது. இதையடுத்து, பருப்புகளை பதுக்கும் வியாபாரிகள் மீது, கடும் நடவடிக்கை எடுக்க, மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டது. இந்த நிலையில், 12 மாநிலங்களில், 8 ஆயிரத்து 394 இடங்களில் நடந்த சோதனையில், 82 ஆயிரத்து 462 டன் பருப்புகள், பறிமுதல் செய்யப்பட்டதாக, மத்திய நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. **இது தொடர்பாக அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், மேலும் கூறியிருப்பதாவது:** பறிமுதல் செய்யப்பட்ட பருப்புகள், சில்லரை மார்கெட்டில் விற்க நடவடிக்கை எடுக்கப்படும், என, சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் தெரிவித்துள்ளன. இதையடுத்து, பருப்புகள் விலை குறைய தொடங்கியுள்ளன. கிலோ ரூ.210க்கு விற்ற துவரம் பருப்பு, நேற்று ரூ.190 ஆக விலை குறைந்தது. இதேபோல், உளுத்தம் பருப்பு கிலோ ரூ.198க்கு விற்றது, ரூ.190 ஆக குறைந்துள்ளது. மஹாராஷ்டிரா மாநிலத்தில் மட்டும், 57 ஆயிரத்து 455 டன் பருப்புகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதனால், மும்பையில், துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.200க்கு விற்றது, ரூ.152 ஆக குறைந்துள்ளது.சத்தீஸ்கரில், 4

ஆயிரத்து 932 டன்னும், ம.பி.,யில், 2 ஆயிரத்து 370 டன்னும், ராஜஸ்தானில், 3 ஆயிரத்து 330 டன்னும், ஹரியானாவில், 2 ஆயிரத்து 189 டன்னும் பருப்புகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு நுகர்வோர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## விவசாய கூட்டுறவு சங்கங்களுக்குபாதுகாப்பு அறை கட்ட கடனுதவி

தேனி:மாநிலம் முழுவதும் தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களில் பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் கட்டுவதற்கு அரசு கடனுதவி வழங்கி வருகிறது.மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களிலும் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் நகைக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. நகைக்கடன் பெறும் அனைவருக்கும் இன்சூரன்ஸ் வசதிகள் செய்யப்படுகிறது. இந்த நகைகளை பாதுகாக்க, சில சங்கங்களில் மட்டுமே பாதுகாப்பு கதவுடன் கூடிய வலுவான அறைகள் உள்ளன.அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் பாதுகாப்பு கதவுகளுடன் கூடிய நவீன அறைகள் கட்டும்படி அரசு உத்தரவிட்டு இருந்தது. இதற்கு பல லட்சம் ரூபாய் செலவாகும். பல சங்கங்களில் இதற்கான நிதி வசதி இல்லை. எனவே, நிதி வசதி உள்ள சங்கங்கள் சொந்த நிதியில் அறையும், கதவும் அமைத்துக் கொள்ளலாம். மற்ற சங்கங்களுக்கு ஆராய்ச்சி, வட்டியில்லா கடனுதவி வழங்கப்படும்.அனைத்து சங்கங்களிலும் கட்டாயம் பாதுகாப்பு கதவுடன் கூடிய அறைகள் அமைக்கப்பட வேண்டும். இவைகள் மிகவும் தரமான முறையில் அமைக்க வேண்டும் என அரசு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

## ராமநாதபுரத்தில் உவர் மண் அதிகரிப்பு குறைந்து வரும் விவசாய நிலப்பரப்பு

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் 4.08 லட்சம் எக்டேர் நிலப்பரப்பு உள்ளது. இதில் மணல் 7,328 எக்டேர், களிமண் 1.82 லட்சம், மணல் சார்ந்த களிமண் 22,138, வண்டல் 43,769, மணல் சார்ந்த குறுமண்

63,602, கடலோர வண்டல் மண் 71,357, செம்மண் 18,390 எக்டேர் உள்ளது. விவசாயம், தரிசு நிலங்களாக 2.06 எக்டேர் உள்ளது.இதில் 54 சதவீதம் மட்டுமே நல்ல மண் உள்ளது. காரமண், மிதமான காரமண் 13 சதவீதம், உவர் மண், மிதமான உவர் மண் 3 சதவீதம் உள்ளன. நல்ல மண்ணில் மட்டுமே நெல், தானியங்கள், பயறு வகைகள், நிலக்கடலை, பருத்தி, மிளகாய் போன்ற பயிர்கள் சாகுபடியாகின்றன. மாவட்டத்தின் பல இடங்களில் 18 முதல் 20 அடி ஆழம் வரை மட்டுமே நல்ல தண்ணீர் உள்ளது. அதற்கு கீழே உவர் நீராக உள்ளது. அப்பகுதியில் சிலர் 'போர்வெல்களை' 20 அடி ஆழத்துக்கு கீழே அமைத்து விடுகின்றனர்.அதில் இருந்து வெளியேறும் நீர் அப்பகுதியில் உள்ள நிலத்தை உவர் மண் பகுதியாக மாற்றி விடுகிறது. இதுபோன்ற காரணங்களால் 15 ஆண்டுகளில் மாவட்டத்தில் அரை சதவீத விவசாய நிலம் உவர் மண் பகுதியாக மாறிவிட்டது.

## அரிய பறவைகள் கூடும் ராமநாதபுரம் நதிபாலம்



ராமநாதபுரம்:ராமநாதபுரம் அருகே நதிபாலம் பகுதியில் அரிய வகை பறவைகள் சங்கமிக்கின்றன.பறவைகளின் சொர்க்க பூமியாக ராமநாதபுரம் மாவட்டம் திகழ்கிறது. இங்கு அக்டோபர் முதல் பிப்ரவரி வரை பறவைகள் தங்குவதற்கும், இனப்பெருக்கம் செய்வதற்கும் ஏற்ற சீதோஷ்ண நிலை உள்ளது. இதனால் இந்தியா மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான பறவைகள் ராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகின்றன. மாவட்டத்தில் சித்திரங்குடி, காஞ்சிரங்குளம், மேலசெல்வனூர், கீழசெல்வனூர், தேர்தங்கல், சக்கரைக்கோட்டை ஆகிய 5 பறவைகள் சரணாலயங்கள் உள்ளன.தவிர கருவேல மரங்கள் அடர்ந்த நீர்நிலை பகுதிகளிலும் ஏராளமான பறவைகள் தங்குகின்றன. ராமநாதபுரம் அருகே வைகை நதியின் குறுக்கே அமைக்கப்பட்ட நதிபாலம் பகுதியில் கருவேல மரங்கள் அடர்ந்து காணப்படுகின்றன. இப்பகுதிக்கு சில ஆண்டுகளாக பறவைகள் அதிகளவில் வரத் துவங்கியுள்ளன.இங்கு கருங்குருவி, செந்நாரை, கூழைகடா, நீர்காகம், கொக்கு, மஞ்சள் மூக்கு நாரை, நத்தை கொத்தி நாரை, செங்கால் நாரை, கிளுவை, வல்லூறு, கவுதாரி, மூக்கான், நீர்கோட்டான், ஆற்று உள்ளான் போன்ற அரிய பறவைகள் அதிகளவில் வருகின்றன. இவற்றை ராமேஸ்வரம் செல்லும் சுற்றுலா பயணிகள்

கண்டு ரசித்து செல்கின்றனர்.இப்பகுதியை பறவைகள் சரணாலயமாக மாற்ற வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென, சுற்றுலா பயணிகள் வலியுறுத்தி உள்ளனர்.

## விவசாயிகளிடம் நேரடி பருப்பு கொள்முதல்?

தமிழகத்தில் உள்ள விவசாயிகளிடம் இருந்து, நேரடியாக பருப்பு கொள்முதல் செய்ய, மத்திய அரசு முடிவு செய்துள்ளது.பருப்பு உற்பத்தியை ஊக்குவிக்கவும், விலையை கட்டுப்படுத்தவும், விவசாயிகளிடம் இருந்து நேரடியாக பருப்பு கொள்முதல் செய்ய, மத்திய அரசு முடிவு செய்துள்ளது.இதுகுறித்து, உணவு மற்றும் கூட்டுறவு துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:கூட்டுறவு துறையின் கீழ் செயல்படும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் விவசாயிகளுக்கு உரங்களை விற்பனை செய்கிறது. இந்த இணையம் மூலம், விவசாயிகளிடம் இருந்து, நேரடியாக பருப்பு கொள்முதல் செய்ய, மத்திய அரசு முடிவு செய்துள்ளது.இதற்காக, பருப்பு சாகுபடி பரப்பு, அதன் வகைகள், விவசாயி எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களை அளிக்குமாறு, மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு கடிதம் எழுதி உள்ளது. அதற்கு ஏற்ப, குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்பட்டு, அடுத்த ஆண்டு அக்டோபர் முதல் பருப்பு கொள்முதல் துவங்க வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.- நமது நிருபர் -

## தேங்காய் வியாபாரத்தில் சாதிக்கும் 'மாஜி' பேராசிரியர்!



எந்த வேலையும் சிறந்த வேலை தான்; படிப்பிற்கேற்ற வேலை கிடைக்காவிட்டால், சாதாரண வேலையைக் கூட, சிறப்பாக செய்து வாழ்வில் சாதிக்க முடியும் என நிரூபித்துள்ளார், முன்னாள் கல்லூரி பேராசிரியர், சிவப்பிரகாஷ், 32. ஆவடியை சேர்ந்த சிவப்பிரகாஷுக்கு பூர்வீகம் பொள்ளாச்சி. பிளஸ் 2 வகுப்பு முடித்து, கல்லூரியில் சேர வேண்டிய நேரம். அவரது தாய் மாலதிக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது. அதனால், தந்தை ஜெயராஜ், தனது வேலையை விட்டுவிட்டு, மாலதி அருகிலேயே இருந்து கவனிக்க வேண்டியதாகி விட்டது. குடும்பத்தை வறுமை சூழ்ந்தது.கல்லூரி கனவுக்கு முழுக்குப் போட்ட சிவப்பிரகாஷ், குடும்பத்தை கரையேற்ற வேலைக்கு சென்றார். இடையே, தன் தாய் நகைகளை விற்று, கோவையில் பட்டயப் படிப்பு முடித்தார். அப்போதே பகுதிநேர வேலைக்கும் சென்றார்.

### நஷ்டம் தான் மிச்சம்:

பின், சென்னையில், தனியார் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தார். இரு ஆண்டுகள் இப்படியே ஓடிவிட, பொறியியல் படிக்க வேண்டும் என்ற தனது கனவினை செயல்படுத்த முடிவெடுத்தார். வேலையை விட்டுவிட்டு, ஆவடியில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில்

சேர்ந்தார். நண்பரின் உதவியுடன் படிப்பை முடித்த சிவப்பிரகாஷுக்கு, நல்ல சம்பளத்தில் வேலை கிடைத்தது. அப்போது தான் அவர் முடிவெடுத்தார்... இயந்திர வாழ்க்கை வேண்டாம் என்று. தேங்காய் வியாபாரத்தில் ஈடுபட விரும்பினார்.பொறியியல் படித்து விட்டு, தேங்காய் வியாபாரமா என, குடும்பத்தில் கடும் எதிர்ப்பு. ஆனால், நம்பிக்கையுடன், சிறிய அளவில் ஆவடியில், பொள்ளாச்சி தேங்காய் வியாபாரத்தை துவக்கினார். முதல் இரு ஆண்டுகளில் நஷ்டம் தான் மிச்சம். மீண்டும் முதலீட்டுக்கு, பணம் தேவைப்பட்டது.அதனால், சிவப்பிரகாஷ், ஒரு தனியார் பொறியியல் கல்லூரியில், பேராசிரியர் பணியில் சேர்ந்தார். அதிகாலை, 4:00 முதல் காலை, 8:00 மணி வரை தேங்காய் வியாபாரம். பின், பேராசிரியர் பணி. மீண்டும் மாலை 5:00 முதல் 9:00 மணி வரை தேங்காய் வியாபாரம். சிறிது சிறிதாக நஷ்டத்தில் இருந்து சிவப்பிரகாஷ் மீண்டார். விலை அதிகமாக இருந்தாலும், தேங்காயின் தரம் வென்றது; வியாபாரம் சூடுபிடித்தது.

பேராசிரியர் பணியை விட்டுவிட்டு, தற்போது முழுநேர தேங்காய் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறார். தற்போது, அவரது கடையில், இன்னொரு பொறியியல் பட்டதாரியும் வேலை செய்து வருகிறார். கடை ஊழியர்களுக்கு புதிய கடையினை துவக்கி கொடுத்து, அவர்களையும் ஊக்குவிக்கிறார், சிவப்பிரகாஷ்.

### பிறருக்கு உதவி செய்ய முடியும்:

**இதுகுறித்து, சிவப்பிரகாஷ் கூறியதாவது:** துவக்கத்தில் அனைவரும் கிண்டல் செய்தனர். ஆனால், நான் விடாப்பிடியாக இந்த தொழிலை செய்து வந்தேன். பல்வேறு கஷ்டங்களுக்கு பின் தற்போது, இந்தப் பகுதியில் எனது கடை தேங்காய் என்றால் தரமானது என்ற பெயர் கிடைத்துள்ளது. அது தான் என் வியாபாரத்திற்கு முதலீடு. ஒரு

நிறுவனத்தில், குறிப்பிட்ட சம்பளத்துடன் வேலை செய்யும் என்னால், பிறருக்கு ஒரு சிறிய அளவில் தான், உதவி செய்ய முடியும். ஆனால், தொழில் செய்யும் போது, என்னால் அதிக அளவு பிறருக்கு உதவி செய்ய முடியும்.நான்கு பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்க முடிகிறது. அதனால் அவர்களின் குடும்பம் நன்றாக இருக்கிறது.படித்த படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்காமல் தவிக்கும் பட்டதாரிகள், தொழில் முனைவோராக மாறி, முதலாளி ஆகலாம். இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**தொடர்பு எண்: 9894290022**

# துவங்கியது!

✦ தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை...

✦ ஏமாற்றாமல் கைகொடுக்கும் என எதிர்பார்ப்பு

தென்மேற்கு பருவமழை, செப்., 30ல் முடிவடைந்தது. அக்., 19ல் வடகிழக்கு பருவ மழை துவங்கி இருக்க வேண்டும். ஆனால், ஒரு வாரம் தாமதமாக வடகிழக்கு பருவ மழை துவங்கி உள்ளது. வங்க கடலில், ஒரு வாரத்துக்கு முன் நிலை கொண்ட காற்று அழுத்தத் தாழ்வு நிலை, தமிழகத்தை நோக்கி நகராமல் சென்று விட்டது. இதனால், உரிய காலத்தில் பருவ மழை துவங்கவில்லை.

### வலுவடையும்:

வங்க கடலின் தென்மேற்கு பகுதியில், இலங்கைக்கு அருகே, இரு தினங்களுக்கு முன் உருவான காற்று அழுத்த தாழ்வு, அப்பகுதியில் நிலை கொண்டு உள்ளது.இது வலுவடைந்து வருவதால், வடகிழக்கு பருவ

மழை, 28ல் துவங்கும் என, வானிலை ஆய்வு மையம் அறிவித்தது.வங்க கடலின் தென் மேற்கு பகுதியில், தற்போது நிலை கொண்டுள்ள காற்று அழுத்த தாழ்வு பகுதி வலுவடைந்து வருவதால், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களான ராமநாதபுரம், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கடலூார், சென்னை உள்ளிட்ட பகுதிகளிலும், திருச்சி, கிருஷ்ணகிரி, வேலூார், திருவண்ணாமலை மாவட்டங்களின் சில பகுதிகளிலும், நேற்று முதல் மழை பெய்யத் துவங்கி உள்ளது.

**இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறுகையில்,** "கடலோர தமிழகம் மற்றும் புதுச்சேரியின் அனேக இடங்களிலும், பிற மாவட்டங்களில், ஓரிரு இடங்களிலும் மழை பெய்யும். சென்னையில் வானம் மேகமூட்டதுடன் காணப்படும். மழை அல்லது இடியுடன் கூடிய மழை, ஒரு சில இடங்களில் பெய்யும்," என்றார்.



**இரு தாழ்வு நிலை:**

கேரள மாநிலம், திருவனந்தபுரம் வானிலை ஆய்வு மைய இயக்குனர் சந்தோஷ் கூறியதாவது: அரபிக்கடலில், லட்சத்தீவின் மேற்கு பகுதியிலும், வங்க கடலில், இலங்கை அருகேயும், இரண்டு காற்று அழுத்த தாழ்வு நிலைகள் உருவாகி உள்ளன. வங்க கடலில் உருவாகியுள்ள தாழ்வு நிலை, கடல் மட்டத்திலிருந்து, 1.5 கி.மீட்டர்

உயரத்தில் நிலை கொண்டு உள்ளது. இது, தமிழகம் மற்றும் ஆந்திராவை நோக்கி, இன்று நகரும் என எதிர்பார்க்கிறோம். எனவே, வடகிழக்கு பருவ மழைதுவங்குகிறது.

**கூடுதல் மழை:**

வடகிழக்கு பருவ மழை நடப்பு ஆண்டில், இயல்பு மழையை விட கூடுதலாகப் பெய்யும் என, ஏற்கனவே கணிக்கப்பட்டு உள்ளது. தமிழகம், கேரளா, ஆந்திரா உள்ளிட்ட இந்திய தீபகற்பத்தின் தெற்கு பகுதியில், வடகிழக்கு பருவ மழை மூலம், 111 செ.மீட்டர் மழை இயல்பாக கிடைக்கும். நடப்பு ஆண்டில்,இயல்பை விட கூடுதலாக மழை பெய்யும் என, எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர் கூறினார். தமிழகத்தில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட வட கிழக்கு பருவ மழை துவங்கி உள்ளது.கடலோர மாவட்டங்களில், நேற்று மதியம் முதலே, மழை பெய்ய துவங்கி விட்டது.மூன்று ஆண்டுகளாக ஏமாற்றிய வட கிழக்கு பருவ மழை, நடப்பு ஆண்டில் கைகொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உஷார்நடவடிக்கை:**

பருவ மழையை சமாளிக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும்படி, வருவாய் துறையினருக்கு அரசு உத்தரவிடப்பட்டு உள்ளது. மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை குறித்து, வருவாய் துறை அமைச்சர் உதயகுமார், நேற்று ஆய்வு செய்தார்.வருவாய் துறை செயலர் வெங்கடேசன், வருவாய் நிர்வாக ஆணையர் அதுல்ய மிஸ்ரா, பேரிடர் மேலாண்மை இணை ஆணையர் லில்லி, சென்னை கலெக்டர் சுந்தரவள்ளி மற்றும் அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தென் மாவட்டங்களில், கனமழை, இடி மின்னல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க, நடவடிக்கை

எடுக்க வேண்டும்.மழை பாதிப்பு ஏற்படும் பகுதிகளில், போர்க்கால அடிப்படையில், நிவாரண பணிகளை கலெக்டர்கள் மேற்கொள்ள வேண்டும் என, அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

**திண்டுக்கல்லில் 'பிளாஸ்டிக்'அரிசிஅதிகாரிகள் ஆய்வு**

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் ஆய்வில், 'பிளாஸ்டிக் அரிசி' விற்பனை கண்டறியப்பட்டது. அதன் மாதிரியை ஆய்வுக்காக எடுத்துள்ளனர்.தீபாவளி பண்டிகை ெருங்குவதையொட்டி தமிழகத்தில் உணவு பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளது. இந்நிலையில் மாநில உணவு பாதுகாப்பு ஆணைய அதிகாரிகள், அனைத்து

மாவட்டங்களிலும் கண்காணிப்பில் ஈடுபடவும், போலி உணவை கண்டறியவும் அரசு உத்தரவிட்டது.எனவே திண்டுக்கல்லில் மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரி சாம் இளங்கோ, அலுவலர்கள் லாரன்ஸ், செல்வம் ஆய்வில் ஈடுபட்டனர். கச்சேரி தெருவில் முறையின்றி விற்பனைக்கு வைத்திருந்த எண்ணெய் பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. மார்க்கெட்டில் அழுகியதாக கண்டறியப்பட்ட 15 கிலோ மீன்கள் பறிமுதல் செய்யப்பட்டன.சாம் இளங்கோ கூறியதாவது: திண்டுக்கல்லில் இன்று நடந்த ஆய்வில், பிளாஸ்டிக் அரிசி கலப்படமாக விற்பனை செய்வது கண்டறியப்பட்டது அதை ஆய்வுக்கு எடுத்துள்ளோம். ஆய்வில் பிளாஸ்டிக் அரிசி தான் என தெரியவந்தால், உணவு பாதுகாப்பு சட்டத்தில் விற்பனையாளர் கைது செய்யப்படுவார், என்றார்.

**நாற்றுகள் முதிர்வால், விவசாயிகள் கலக்கம்:வடகிழக்கு பருவமழை காப்பாற்றுமா?**

திருக்கோவிலுார்:வடகிழக்கு பருவமழையை நம்பி நுாற்றுக்கணக்கான ஏக்கரில், சம்பா நெல் நாற்றங்கால் தயார் செய்துள்ள விவசாயிகள்

வேதனையில் உள்ளனர். தென்மேற்கு பருவமழை விழுப்புரம், திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு மாவட்ட விவசாயிகளுக்கு வழிசெய்து கொடுக்கும். இந்தாண்டு தென்மேற்கு பருவமழை முற்றிலுமாக பொய்த்து போனது.இதனால் நீர் நிலைகள் வற்றி, வறண்டு போனது. ஆடிமாதம் சம்பா நாற்றங்கால் பணியை தயார் செய்யும் விவசாயிகள், இந்தாண்டு மழை இல்லாததால் கைவிட்டுவிட்டனர். வடகிழக்கு பருவமழை கைகொடுக்கும் என்ற எதிர்பார்ப்புடன், நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் கிணற்று தண்ணீரை கொண்டு விவசாயிகள் நாற்றங்கால் பணியை துவக்கியுள்ளனர்.

அக்டோபர் இரண்டாவது வாரத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கும் என்ற எதிர்பார்ப்பு காரணமாக, மாதத்தின் துவக்கத்திலேயே நாற்றங்கால் தயார் செய்து விட்டனர். தற்போது நாற்றுகள் 20 நாட்களை கடந்து விட்டது.நிலத்தை ஓட்டி, நடவுவுக்கு தயாராகியிருக்க வேண்டிய இந்த காலகட்டத்திலும், வடகிழக்கு பருவமழை துவங்கவில்லை. இனிமழை பெய்து நடவு பணியை துவங்குவதற்குள், நாற்றுக்கு வயதாகிவிடும் என விவசாயிகள் பலரும் வேதனை தெரிவித்தனர்.

குறுகிய கால நெல் ரகங்களை 25 நாட்களுக்குள்ளும், மற்ற நெல் ரகங்களை 30 நாட்களுக்குள்ளும் நடவு செய்ய வேண்டும். பருவமழை குறிப்பிட்ட நாட்களில் அதிகளவில் பெய்தால் மட்டுமே, விவசாயிகள் விரைவாக நடவு பணியை துவங்க முடியும்.பருவ மழை பெய்யத்தவறினால், கடன் பட்டு விதை நெல் வாங்கி தயார் செய்த நாற்றங்கால்கள் பயனற்றதாகிவிடும் என விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**கடலை, சூரியகாந்தி எண்ணெய் விலை சரிவு: தீபாவளி பலகார உற்பத்தியாளர்கள் 'குஷி'**

சேலம்: தீபாவளி பண்டிகைக்கு இன்னும், 14 நாட்களே உள்ள நிலையில், நேற்று கடலை எண்ணெய் விலை, லிட்டருக்கு, 20 ரூபாயும், சூரியகாந்தி எண்ணெய் விலை, லிட்டருக்கு, ஐந்து ரூபாயும் சரிந்துள்ளது.

மத்திய அரசு, செப்.,18ல் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பாமாயில், சூரிகாந்தி எண்ணெய்க்கு, இறக்குமதி வரியை, 5 சதவீதம் உயர்த்தியது. கடந்த மாதம் அனைத்து ரக எண்ணெய் விலையும் உயர்ந்தது. தீபாவளி பண்டிகை நெருங்குவதால், இந்த விலை உயர்வு மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், நேற்று யாரும் எதிர்பாராத வகையில், சூரியகாந்தி, கடலை எண்ணெய் விலை குறைந்தது.

சேலம், தாவர எண்ணெய் விற்பனையாளர்கள் சங்க தலைவர் சந்திரகாசன் கூறியதாவது: தமிழகத்தில் நிலக்கடலை அறுவடை சீசன் துவங்கி உள்ளதால், கடலை எண்ணெய் உற்பத்தி அதிகரித்துள்ளது. மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் எண்ணெய்யின் அளவும் அதிகரித்துள்ளது. அதன் விலை, லிட்டருக்கு, 20 ரூபாய் சரிந்துள்ளது. இந்த சரிவால், சூரியகாந்தி எண்ணெய் விலை, லிட்டருக்கு, 5 ரூபாயும், பாமாயில், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் விலை, லிட்டருக்கு, 2 ரூபாய் முதல், 3 ரூபாய் வரை, சரிவு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். தீபாவளி பண்டிகைக்கு இன்னும், 14 நாட்களே உள்ள நிலையில், பலகார தயாரிப்பு பணி சுறுசுறுப்பாக நடந்து வருகிறது. தற்போது, எண்ணெய் விலை, சரிவு ஏற்பட்டுள்ளது. பலகார தயாரிப்பாளர்கள் மத்தியில் மகிழ்ச்சி கலந்த வரவேற்பை ஏற்படுத்தி உள்ளது.

## 30ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் 30ம் தேதி, காலை 11:00 மணியளவில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் வீரராகவ ராவ் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, வேளாண்மை பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.எனவே, மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என, ஆட்சியர் கேட்டுக்கொண்டு உள்ளார்.

## அக்.,30ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

சேலம்: சேலம் கலெக்டர் சம்பத் வெளியிட்டுள்ள அறிக்கை: சேலம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், வரும், 30ம் தேதி, காலை, 10.30 மணிக்கு, கலெக்டர் தலைமையில் நடக்கிறது. கலெக்டர் அலுவலகத்தின் முதல் தளத்தில் உள்ள கூட்டரங்கில் நடத்தப்படும், இந்த கூட்டத்தில், விவசாயிகள் தங்களுடைய கோரிக்கையை மனுக்களாக வழங்கலாம். நேரடியாக வந்தும் குறைகளை தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பருவ மழைக்கு தயாராகுங்கள் அலுவலர்களுக்கு ஆட்சியர் உத்தரவு

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவ மழைக்கு தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகளை எடுக்குமாறு, அலுவலர்களுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

திருவள்ளூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவ மழையை முன்னிட்டு, எடுக்க வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது.மாவட்ட ஆட்சியர் வீரராகவ ராவ் தலைமை வகித்து பேசியதாவது:அனைத்து வட்டாட்சியர்களும், தங்களது வட்டத்திற்குட்பட்ட பேரிடர் தாக்குதலுக்குள்ளாகும் தாழ்வான பகுதிகள் அடங்கிய விவரங்களை அறிந்து தயாராக இருக்க வேண்டும்.

பொதுமக்களை தங்க வைப்பதற்காக காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணி துறை மற்றும் மீன்வள துறையினருடன் இணைந்து செயல்படவேண்டும்.மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணி துறையினர் பாதுகாப்புக்கு தேவையான உபகரணங்களை தயார் நிலையில் வைத்து கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் முத்து, திருவள்ளூர் துணை ஆட்சியர் ராகுல்நாத் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**நெல்லிச்சாறு பானம் விற்பனை: உணவு பாதுகாப்பு அலுவலர் ஆய்வு**

சேலம்: சேலம் வின்ஸ்டார் டிரேடர்ஸில், நெல்லிச்சாறு பானம் விற்பனை செய்யப்படுவது குறித்து, மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் அனுராதா நேற்று ஆய்வு செய்தார்.

சேலம் புது பஸ் ஸ்டாண்டில், வின்ஸ்டார் டிரேடர்ஸ் நிறுவனத்தின் சார்பில், நெல்லிச்சாறு பானம் தயார் செய்து, விற்பனை செய்யப்பட்டது. கடந்த ஒரு மாதத்துக்கு முன், இந்த பானத்தின் தரம் குறித்து குற்றச்சாட்டு எழுந்தது. சேலம் மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர், வின் ஸ்டார் டிரேடர்ஸ் நிறுவனத்தில் ஆய்வு செய்தார். இதில், உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கும் பென்சாலிக், அஸ்காரிக் அமிலம் சேர்க்கப்படுவது தெரிய வந்தது. அதனால், நெல்லிச்சாறு பானத்தை, 15 நாள் விற்பனை செய்ய தடை விதித்தார். வின் ஸ்டார் டிரேடர்ஸில், மீண்டும் நெல்லிச்சாறு

பானம் விற்பனை செய்யப்படுவதாக நேற்று, உணவு பாதுகாப்பு அலுவலர் அனுராதாவுக்கு புகார் சென்றது. நேற்று மதியம், அந்த நிறுவனத்துக்கு ஆய்வுக்கு சென்றார். அங்கு, நெல்லிச்சாறு பானம், 200 பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. பெட்டிக்கு ஒரு பாட்டில் வீதம் மாதிரி எடுக்கப்பட்டது. அனைத்து பெட்டிகளுக்கும் சீல் வைக்கப்பட்டது. உணவு பகுப்பாய்வு கூடத்தில் இருந்து, ஆய்வு முடிவு வரும் வரை, விற்பனை செய்யக்கூடாது, என அங்கிருந்தவர்களுக்கு, அனுராதா எச்சரிக்கை விடுத்தார்.

பின்னர், அவர் கூறியதாவது: வின் ஸ்டார்ஸ் டிரேடர்ஸில், விற்பனை செய்யக்கூடாது எனக்கூறிய, நெல்லிச்சாறு பானம் விற்பனை செய்யப்படுவதாக புகார் வந்தது. அதனால் ஆய்வு செய்யப்பட்டது. அங்கு, 200 பெட்டிகளில், நெல்லிச்சாறு பானம் இருப்பது தெரிய வந்தது. அனைத்து பெட்டிகளுக்கும் சீல் வைக்கப்பட்டது. நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. பத்து பாட்டில் மாதிரிக்கு எடுக்கப்பட்டுள்ளது. இவை ஆய்வுக்கு அனுப்பப்படும். அதுவரை விற்பனை செய்யக்கூடாது. விற்பனை செய்தால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என, எச்சரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## வடகிழக்கு பருவமழை துவங்கியது: நாமக்கல், மோகனூரில் கனமழை

நாமக்கல்: வடகிழக்கு பருவமழை துவங்கியதை தொடர்ந்து, நாமக்கல், மோகனூர் பகுதியில் நேற்று கனமழை பெய்தது. ராசிபுரம், ப.வேலூர் பகுதியில் லேசான மழை தூறியது. இது விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. நாமக்கல் நகரில், நேற்று காலை முதல், வெயில் வாட்டி வதைத்தது. அதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதித்தது. பலரும் வெளியே வரமுடியாமல் வீட்டுக்குள் முடங்கினர். இந்நிலையில், நேற்று மாலை, 6 மணிக்கு திடீரென வானில் கருமேகம் சூழ்ந்தது. அதை தொடர்ந்து, கனமழை பெய்யத்துவங்கியது. எவ்வித

ஆர்ப்பாட்டமும் இல்லாமல், அமைதியாக மழை பெய்ததால், ஒரு மணி நேரம் நீடித்தது. அதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. மேலும், பள்ளங்கில் மழைநீர் குளம்போல் தேங்கி நின்றது. பகலில் வெயிலில் வாடிய மக்கள், இரவில் சில்லென்று குளிர்ந்த காற்று வீசியதால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அதேபோல், மோகனூரில் கனமழை பெய்தது. ராசிபுரம், ப.வேலூர் ஆகிய பகுதிகளில் பரவலாக லேசான மழை பெய்தது. அதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. சாலையில் தண்ணீர் தேங்கியதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டது. வடகிழக்கு பருவமழை துவங்கியதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பருவநிலை மாற்றத்தால் நுகர்வு அதிகரிப்பு: இறைச்சி, முட்டை விலை கிடுகிடு உயர்வு

நாமக்கல்: புரட்டாசி விரதம், பருப்பு விலை உயர்வு, பருவநிலை மாற்றம் ஆகிய காரணங்களால், கறிக்கோழி இறைச்சி மற்றும் முட்டை நுகர்வு அதிகரித்து, அதன் விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

நாமக்கல் மண்டலத்தில், 1,200க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் மூலம், ஐந்து கோடி கோழிகள் வளர்க்கப்படுகின்றன. அவற்றின் மூலம், தினமும், 3.25 கோடி முட்டை உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை, உள்ளூர் தேவைக்கும், பிற மாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. பருவ நிலை மாற்றத்தால், கேரளா மாநிலத்தில், குளிர்வீசத் துவங்கி உள்ளது. இதனால், அங்கு, முட்டை மற்றும் இறைச்சித் தேவை அதிகரித்துள்ளது. அதன் காரணமாக, முட்டைக்கோழி விலை படிப்படியாக உயர்ந்து வரும் நிலையில், கறிக்கோழியும் உயர்ந்து வருகிறது. இம்மாத துவக்கத்தில், கிலோ, 60க்கு விற்பனை செய்யப்பட்ட கறிக்கோழி, தற்போது, 80 ரூபாயாக

உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம், ஒரே நாளில், கிலோ, எட்டு ரூபாய் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து, கறிக்கோழி உற்பத்தியாளர்கள் கூறியதாவது: புரட்டாசி மாத விரதத்தால், முட்டை மற்றும் கறிக்கோழி விற்பனை மந்தமாக இருந்தது. தற்போது, பருவநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளதால், முட்டை மற்றும் கறிக்கோழியை மக்கள் விரும்பி சாப்பிட்டு வருகின்றனர். மேலும், பருப்பு விலையும் வரலாறு காணாத அளவில் உயர்ந்துள்ளதால், உணவில் மக்கள் முட்டை, கறிக்கோழியை அதிகம் பயன்படுத்துகின்றனர். இதற்கிடையே, தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை துவக்கம் மற்றும் தீபாவளி சீஸன் விற்பனையால், வரும் நாளில், முட்டை மற்றும் கறிக்கோழி நுகர்வு அதிகமாக இருக்கும். அதனால், அதன் விலை மேலும், அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

இந்நிலையில், நேற்று, நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நடந்தது. அதில், முட்டை கொள்முதல் விலையில், 329 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசு உயர்த்தி, 334 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 334, ஹைதராபாத், 305, விஜயவாடா, 302, பர்வாலா, 325, மும்பை, 345, மைசூர், 346, பெங்களூரு, 340, கொல்கத்தா, 335, டில்லி, 330. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், முட்டைக்கோழி கிலோ, 64 ரூபாய்க்கும், கறிக்கோழி கிலோ, 80 ரூபாய்க்கும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**போதிய உரம் கையிருப்பு: வேளாண் அதிகாரி தகவல்**

மொடக்குறிச்சி: நடப்பாண்டில் போதிய உரம் கையிருப்பு உள்ளதாக, ஈரோடு வேளாண் உரக்கட்டுப்பாட்டு அலுவலர் சண்முகசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: நடப்பாண்டில் கீழ்பவானி அணையிலிருந்து பாசனத்துக்காக, தண்ணீர் திறக்கப்பட்டு பல்லாயிரம் ஏக்கரில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்துள்ளனர். தற்போது ஒரு சில இடங்களில் நெற்பயிர்கள் பால் கருதுகளை தள்ளியுள்ளன. கொடுமுடி, மொடக்குறிச்சி, அவல்பூந்துறை, அரச்சலூர் பகுதியில் பயிர் நடவில், ஆரம்பக் கட்டத்தை தொட்டுள்ளனர். டெல்டா மாவட்டங்களில், கடந்த, ஆண்டு உரத்தட்டுப்பாடு நிலவியது. ஆனால் ஈரோட்டில் உரத்தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை எடுத்து போதிய உரம் விவசாயிகளுக்கு வழங்கபட்டது. கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் மழையில்லாததால் தற்போது தமிழக விவசாயிகளுக்கு தேவைக்கு ஏற்ப உரம் வழங்கப்பட்டுள்ளது. வழக்கத்துக்கு மாறாக கையிருப்பில் உரம் அதிகம் உள்ளது. ஈரோடு மாவட்ட தொடக்க வேளாண்மை கூட்டுவுறவு வங்கிகளில் யூரியா 1450 டன், டி.ஏ.பி., 940 டன், பொட்டாஷ் 2200 டன், காம்ப்ளக்ஸ் 1400 டன் உள்ளன. தனியார் கடைகளில் யூரியா, 1000 டன், டி.ஏ.பி., 740 டன், பொட்டாஷ், 900 டன், காம்ப்ளக்ஸ், 1400 டன்களும் உள்ளன. விவசாயிகள் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு ஈரோடு வேளாண் உரக்கட்டுப்பாட்டு அலுவலர் கூறினார்.

## விதை எள் உற்பத்தி அறுவடை: மானிய விலையில் வழங்க ஏற்பாடு

மொடக்குறிச்சி: ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் விதை எள் உற்பத்தி அறுவடை துவங்கப்பட்டுள்ளதால், ஓரிரு மாதங்களில் விவசாயிகளுக்கு, மானிய விலையில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஈரோடு மண்டல வேளாண் இயக்குனர் திருமூர்த்தி கூறியதாவது: ஈரோடு அம்மாபேட்டை, அந்தியூர், பவானிசாகர், கோபி, சத்தியமங்கலம், நம்பியூர் பகுதியில் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் விதை எள் உற்பத்தி தொடங்கபட்டது. 20 ஹெக்டேர் பரப்பளவில் வெள்ளை எள், கருப்பு எள், செங்கூர் எள் என பயிரடப்பட்டு, தற்போது அறுவடை துவங்கியுள்ளது. விதை உற்பத்திக்கு, 21 டன் இலக்கு நிர்ணயிக்கபட்டு, விசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டது. நடப்பாண்டில் ஈரோடு மாவட்டத்துக்கு, விதை விநியோகம், 42 டன்னிற்கு மேல் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. இதற்காக, ஐந்து லட்சத்து 4 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்க அரசு உத்திரவிட்டுள்ளது. விதை உற்பத்திக்கு கிலோவுக்கு ரூ.10ம், விவசாயிகளுக்கு எள் பெருக்கத்தை ஏற்படுத்த, ஒரு கிலோவுக்கு, ரூ.12 மானியம் தரப்படுகிறது. எள் விதை அறுவடை செய்யப்படுவதால், வரும் விதைகளை பரிசோதனை செய்து, முளைப்பு திறன் கொண்டுள்ள எள்ளை, ஜனவரி மாதத்துக்குள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இவ்வாறு மண்டல வேளாண் இயக்குனர் கூறியுள்ளார்.

## கூடலூரில் பூ புத்தரி திருவிழா: சுற்றுலா பயணிகள் வியப்பு

கூடலூர்:கூடலூர் அருகே நடந்த, ஆதிவாசி மக்களின் பாரம்பரிய 'கதிர் அறுவடை' திருவிழாவை, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் ரசித்தனர்.

நீலகிரி மாவட்டம், கூடலூர் புத்தூர்வயல் பகுதியில், பனியர் இன ஆதிவாசி மக்கள், நெல் அறுவடைக்கு முன்பு, 'பூ புத்தரி' என்ற பெயரில் பாரம்பரிய முறைப்படி, விழா கொண்டாடி வருகின்றனர்.இந்த ஆண்டுக்கான விழா, நேற்று காலை, நம்பாலக்கோட்டை வேட்டைகொருமகன் கோவிலில் துவங்கியது. சிறப்பு பூஜையை தொடர்ந்து, ஆதிவாசி மக்கள், நெற்கதிர் அறுவடைக்காக

புத்துார்வயலுக்கு சென்றனர். அங்கு தேர்வு செய்யப்பட்ட வயலில், குறிப்பிட்ட இடத்தில், அவர்களின் குல தெய்வத்துக்கு விளக்கேற்றி பூஜை செய்து, பாரம்பரிய இசையுடன், அறுவடை பணியை துவக்கினர்.அறுவடை செய்யப்பட்ட நெற்கதிரை கட்டாக தலையில் சுமந்து, வயலை மூன்று முறை சுற்றி வந்தனர். ஊர்வலமாக பகவதி அம்மன் கோவில் திறந்த மண்டபத்துக்கு எடுத்து வந்து, பூஜை செய்தனர்.அப்போது, பழங்குடியின பெண்கள், பாரம்பரிய நடனம் ஆடி மகிழ்ந்தனர்.பூஜிக்கப்பட்ட நெற்கதிரை நம்பாலகோட்டை வேட்டைகொருமகன் கோவிலில் வைத்து, சிறப்பு பூஜை செய்து, விவசாயிகளுக்கு பிரசாதமாக வழங்கினர். விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் இவ்விழாவை, உள்ளூர் மக்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் கண்டு ரசித்தனர்.

**கடலை பயிரில் பூச்சி: விரக்தியில் விவசாயிகள்**

அருப்புக்கோட்டை:அருப்புக்கோட்டை அருகே 20 ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட கடலை பயிர்களை கம்பளி பூச்சிகள் @Œதம் செய்து விட்டதால் விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.

அருப்புக்கோட்டை அருகே செம்பட்டி, மேட்டு தொட்டியான்குளம், குறிஞ்சாக்குளம், இலங்கிபட்டி, கட்டங்குடி, மணவராயநேந்தல் கிராமங்களில் 20 ஆயிரம் ஏக்கரில் கடலை பயிர் விவசாயம் நடக்கிறது. இப்பகுதி செம்மண் பூமியாக இருப்பதால் கடலை விளைவதற்கு ஏற்ற நிலமாக உள்ளது. ஆடி மாதம் கடலை பயிரிட்டு 3 மாதங்களில் கடலையை எடுத்து விடுவர். ஒரு ஏக்கருக்கு 25 மூடைகள் கடலை கிடைக்கும்.

குற்றச்சாட்டு :கடந்த சில ஆண்டுகளாக கடலை பயிர்களை கம்பளி பூச்சிகள் அழித்து வருகின்றன. தற்போதும் கடலை நிலங்களில் கம்பளி பூச்சிகள் நிறைந்து பயிர்களை அழித்து வருகின்றன. ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் வரை செலவழித்து பயரிடப்பட்ட கடலை செடிகள் அழிவதை கண்டு விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.

"வேளாண் அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்தும் பார்க்கவில்லை' என,விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். கம்பளி பூச்சிகளை அழித்து கடலை செடிகளை காப்பாற்ற வேளாண் அதிகாரிகள் முன்வர வேண்டும்

தொட்டியான்குளம் வீரையா."" மருந்துகள் வாங்கி அடித்தும் பயன் இல்லை. 2 ஏக்கரில் விவசாயம் செய்த கடலை பயிர்கள் அனைத்தும் @Œதமாகி விட்டன. கடன் வாங்கி விவசாயம் செய்தும் பலன் இல்லை,"என்றார்.

தொட்டியான்குளம் வெள்ளையம்மாள்,"" 5 ஏக்கரில் கடலை பயிரிட்டுள்ளேன். செடிகள் வளர்ந்து கடலை முற்றும் பருவத்தில் கம்பளி பூச்சிகள் வந்து ôடிகளை @Œதம் செய்து விட்டன,"என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வடகிழக்குப் பருவமழை இன்று தொடக்கம்: கடலோர மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

வட கிழக்குப் பருவமழை புதன்கிழமை தொடங்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் அதன் இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது: அண்மையில், இலங்கையை ஒட்டிய தென் மேற்கு வங்கக் கடலில் குறைந்தக் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவானது. தற்போது அதே இடத்தில் நீடிக்கிறது. தற்போது, அதே இடத்தில் வலுப்பெறாமல் தாழ்வுப் பகுதியாகவே மட்டும் நிலைக் கொண்டுள்ளது. இதன் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் கடந்த 24 மணி நேரத்தில் ஓரிரு இடங்களில் மட்டும் மழை பெய்துள்ளது. அதாவது, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி, செங்குன்றத்தில் அதிகபட்சமாக 20 மி.மீ, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் 10 மி.மீட்டர் மழையும் பதிவாகியது.

முன்னறிவிப்பு:

கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் பலத்த மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புள்ளது. மாநிலத்தின் அனேக இடங்களில் நாளை (புதன்கிழமை) மழை பெய்வதற்கான வாய்ப்புள்ளதால், வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என்றார் எஸ்.ஆர்.ரமணன்.

மீனவர்களுக்கு எச்சரிக்கை:

அடுத்த 24 மணி நேரத்தில், தென் தமிழகக் கடலோரத்தில் வடக்கிலிருந்து, வடமேற்கு நோக்கி மணிக்கு 45 முதல் 55 கி.மீட்டர்

வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் கடலுக்குள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

**விவசாயிகள் குறைதீர்வுக் கூட்டம்**

திருவள்ளூர் மாவட்ட மாதாந்திர விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் வரும் 30-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அக்டோபர் 30-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வருவாய்த் துறை, மின்வாரியம், கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, மீன்வளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை உள்ளிட்ட இதர வேளாண்மை சார்ந்த துறை அலுவலர்கள் கலந்துகொண்டு விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.

எனவே திருவள்ளூர் மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்துகொண்டு பயன்பெறலாம்.

**விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம்**

விழுப்புரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு கோட்டாட்சியர் செந்தில்ஆறுமுகம் தலைமை வகித்தார். வேளாண், மின்துறை உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்ததாவது: மாவட்டத்தில் உள்ள பல ஏரிகள் ஆக்கிரமிப்பில் சிக்கியுள்ளன. இதனால், மழைநீர் தேங்க வழியின்றி, நிலத்தடி நீர் குறைந்து விவசாயம் பாதித்து வருகிறது.

ஏரி ஆக்கிரமிப்புக்களை பொதுப்பணித் துறையினர் அகற்ற வேண்டும். நீர்பிடிப்பை மேற்கொள்ள மழைக்கு முன்பு ஏரிகளை தூர்வாரி சீரமைக்க வேண்டும்.

செண்டூர், மயிலம் உள்ளிட்டப் பகுதிகளில் விவசாய மின் இணைப்பை விரைந்து வழங்க வேண்டும். கண்டமங்கலம் அருகே நவமால்மருதூர், மிட்டா மண்டகப்பட்டு சாலை 2 கி.மீ. சாலை குண்டும், குழியுமாக பராமரிப்பின்றி கிடக்கிறது. இதனை சீர்படுத்தித் தர வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்றனர்.

### மழை எதிரொலி: மீனவர்களுக்கு எச்சரிக்கை

மழை அறிவிப்பு எதிரொலியாக மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் கடலோர மாவட்டங்களில் 2 நாள்களுக்கு மழை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கை கடற்கரையை ஒட்டி காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரி, ஆந்திரம், கேரளம் உள்ளிட்ட பகுதிகளில் வரும் 28-ம் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளதால் திங்கள்கிழமை முதல் கடலோர மாவட்டங்களில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் தமிழகம், புதுச்சேரி, ஆந்திர மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தமிழகம் மற்றும் புதுச்சேரியின் கடலோர மாவட்டங்களில் 2 நாள்களுக்கு மழை நீடிக்கும் எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**குமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கும் முன்பே நிரம்பும் அணைகள்**

குமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பே அணைகள் நிரம்பிவருவதால் வெள்ள அபாயத்தைத் தடுக்கும் வகையில் பணிகளை விரைவுபடுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த பல ஆண்டுகளில் இல்லாத வகையில் நிகழாண்டில் இம் மாவட்ட அணைகள் ஜூன் மற்றும் அக்டோபர் மாதங்களில் நிரம்பியுள்ளன.

ஜூன் மாதத்தில் முக்கிய அணைகளான பேச்சிப்பாறை, பெருஞ்சாணி மற்றும் சிற்றாறு அணைகளின் நீர்மட்டம் உச்ச அளவைத் தொட்டதால் உபரி நீர் வெளியேற்றப்பட்டது.

இந்நிலையில் தற்போதும் இந்த அணைகளின் நீர்மட்டம் உச்ச அளவை நெருங்கி வருகின்றன. வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே அணைகளின் நீர்மட்டம் உச்ச அளவை நெருங்குவதால், மாவட்டத்தில் வெள்ள அபாயம் ஏற்படும் நிலை உள்ளது.

செவ்வாய்க்கிழமை நிலவரப்படி அணைகளின் நீர்மட்டம்: பேச்சிப்பாறை 42.23 அடியாகவும், பெருஞ்சாணி 73.67 அடியாகவும், சிற்றாறு-1 அணை 15.84 அடியாகவும், சிற்றாறு- 2 அணை 11.50 அடியாகவும், பொய்கை அணை 11.50 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணை 54.12 அடியாகவும் உள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை புதன்கிழமை (அக். 28) தொடங்கும் என வானிலை அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில், இம் மாவட்ட அணைகளிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும் என கருதப்படுகிறது.

இதனால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்கும் வகையிலும், ஏற்கெனவே நிரம்பிக் காணப்படும் நீர்நிலைகளில் உடைப்புகள் ஏற்படாத வண்ணம் தடுக்கும் வகையிலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டுமென விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து குமரி மாவட்ட பாசனத்தார் சபைத் தலைவர் வின்ஸ் ஆன்டோ கூறியது: ஆபத்தான குளங்கள், கால்வாய்க் கரைகளை பலப்படுத்தும் நடவடிக்கைகளை அரசு உடனடியாக செய்ய வேண்டும். பேச்சிப்பாறை, பெருஞ்சாணி உள்ளிட்ட பிரதான அணைகளின் உபரி மதகுகளை இயக்கி சோதனை செய்ய வேண்டும். அணைகளில் இரவு நேரங்களில் பணியில் இருக்கும் ஊழியர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்க வேண்டும். பொதுமக்கள் மத்தியில் வெள்ள அபாய விழிப்புணர்வுகளை அதிகப்படுத்த வேண்டும் என்றார்.

## அக். 30-ல் விவசாயிகள் குறைகேட்பு

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை (அக். 30) முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

முன்னதாக காலை 10 மணிக்கு வேளாண் துறை உள்ளிட்டவற்றின் சார்பில் விவசாயிகளுக்கு சிறப்புக் கண்காட்சி தொடங்கப்படவுள்ளது.

எனவே, தருமபுரி மாவட்ட விவசாயிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு குறைகளையும் கருத்துகளையும் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் கே. விவேகானந்தன் அழைப்புவிடுத்துள்ளார்.

**நாமகிரிப்பேட்டையில் ரூ.15 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்**

நாமகிரிப்பேட்டை வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏலத்தில் 274 மஞ்சள் மூட்டைகள் ரூ.15 லட்சத்துக்கு ஏலம் போயின.

இந்த ஏலத்தில், தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம் மற்றும் சுற்று

வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சள் அறுவடை செய்து ஏலத்தில் குவித்தனர். இதில், தலா 65 கிலோ கொண்ட 274 மூட்டைகள் ஏலத்தில் வைக்கப்பட்டன. இதில், விரலி ரகம் அதிகபட்சமாக 9 ஆயிரத்து 469 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 7 ஆயிரத்து 919 ரூபாய்க்கும், உருண்டை ரகம் அதிகபட்சமாக 8 ஆயிரத்து 69 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 7 ஆயிரத்து 449 ரூபாய்க்கும், பனங்காலி அதிகபட்சமாக 6 ஆயிரத்து 300 ரூபாய்க்கும் ஏலம் போனது. இதில் மொத்தம் ரூ.15 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம் நடைபெற்றது.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

திருப்பூர் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு, கோட்டாட்சியர் ப.முருகேசன் தலைமை வகித்தார். இதில், விவசாயிகள் பங்கேற்றுப் பேசுகையில், "கோயில்வழி, வாவிகுளம் ஆக்கிரமிப்பை உடனடியாக அகற்றவேண்டும். திருப்பூர் மாநகராட்சி, 58-ஆவது வார்டில் சாலைகளிலேயே குப்பைகள் கொட்டிக் கிடப்பதால், சுற்றுச்சூழல் கடும் பாதிப்பிற்குள்ளாகி வருகிறது. மேலும், ஆடு, கோழிகளின் இறைச்சிக் கழிவுகளும் அப்படியே கொட்டப்படுவதால் அப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுகிறது.

சின்னாண்டிபாளையம் முதல் எம்.செட்டிபாளையம் வரை 2 கி.மீ. தூரத்திற்கு சாலை அமைக்க வேண்டும். ஆண்டிபாளையம் பகுதியைச்

சேர்ந்த முதியவர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஓய்வூதியத்தை மீண்டும் வழங்கவேண்டும்' என்றனர்.

### பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 57.73 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரபடி 57.73 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,050 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 700 கன அடி நீரும், வாய்க்காலில் 2,000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 6.55 டி.எம்.சி.

### அரிய வகை ஆந்தை மீட்பு

ஈரோட்டில் வழி தவறி வந்த அரிய வகை ஆந்தை மீட்கப்பட்டு வனத் துறையிடம் செவ்வாய்க்கிழமை ஒப்படைக்கப்பட்டது.

ஈரோடு, முனிசிபல் காலனி, முத்துசாமி வீதியில் உள்ள ஒரு மருந்துக்கடை அருகே செவ்வாய்க்கிழமை காலை வெள்ளை நிறத்தில், அரியவகை ஆந்தை ஒன்று நின்றது. இதை அப்பகுதிமக்கள் ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

பின்னர், வனத் துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த ஈரோடு வனச்சரக அதிகாரிகள், அந்த ஆந்தையை மீட்டு, வெள்ளோடு பறவைகள் சரணாலயத்துக்கு கொண்டுச்சென்றனர்.

இதுகுறித்து, வனத்துறையினர் கூறுகையில், "இது அரிய வகை வெள்ளை ஆந்தையாகும். வழி தவறி இங்கு வந்துள்ளது. தற்போது வெள்ளோடு பறவைகள் சரணாலயத்தில் ஏராளமான வெளிநாட்டு பறவைகள் வருகின்றன. எனவே, இதுவும் அங்கிருந்து வழி தவறி வந்திருக்க வாய்ப்புள்ளது என்றனர்.

## உதகையில் பரவலாக மழை, கடும் குளிர்

இதமான காலநிலை நிலவி வந்த உதகையில் செவ்வாய்க்கிழமை பகலிலிருந்து பரவலாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக உதகையில் கடும் குளிரும் நிலவுகிறது.

உதகையில் கடந்த இரு நாட்களுக்கு முன்னர் வரை பகலில் வெயிலும், பிற்பகலில் மழையும், இரவில் நீர்ப்பனியுமான காலநிலை நிலவி வந்தது. விரைவில் உறைபனி கொட்டத் தொடங்குமென எதிர்பார்க்கப்பட்ட நிலையில், காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு திங்கள்கிழமை இரவிலிருந்து குளிர் காற்று வீசத் தொடங்கியது. செவ்வாய்க்கிழமை பிற்பகலிலிருந்து பரவலாக மழை பெய்து வருகிறது. மழையின் காரணமாக கடும் குளிர் நிலவுகிறது. வடகிழக்கு பருவமழை தொடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நீலகிரி மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலுமே காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

## துவாக்குடியில் 20.5 மி.மீ. மழை

திருச்சி மாவட்டத்தில் மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதியில் செவ்வாய்க்கிழமை பிற்பகலில் பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக துவாக்குடி பகுதியில் 20.5 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதன் அருகிலுள்ள கன்னியாகுமரி, இலங்கைஒட்டியுள்ள பகுதியின் வளிமண்டலத்தில் அண்மையில் உருவான மேலடுக்குச் சுழற்சி அதே இடத்தில் நிலை கொண்டிருக்கிறது. இதன் காரணமாக திங்கள்கிழமை முதல் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

செவ்வாய்க்கிழமை காலை முதலே மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பிற்பகல் 2.30 மணிக்கு மேல்

பெய்யத் தொடங்கிய ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்தது. அதன் பின்னரும் மழைத்தூறல் தொடர்ந்தது.

திருச்சி மாநகரில் தென்னூர், தில்லைநகர், பாலக்கரை, மார்க்கெட், சத்திரம் பேருந்து நிலையம், மத்திய பேருந்து நிலையம், உறையூர், மன்னார்புரம், டிவிஎஸ் டோல்கேட், சுப்பிரமணியபுரம்,கே.கேநகர், கருமண்டபம், வயலூர் சாலை உள்ளிட்ட மாநகரின் பல்வேறு பகுதிகளிலும், துவாக்குடி, மண்ணச்சநல்லூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்தது.

தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக சாலைகளில் மழைநீருடன் சாக்கடை நீரும் கலந்ததால் பொதுமக்கள் அவதிக்குள்ளாகினர். இரு சக்கர வாகனங்களில் சென்றோரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி மாவட்டத்தில் துவாக்குடி பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் 20.5 மி.மீ, திருச்சி நகரத்தில் 16.5 மி.மீ, விமான நிலையப் பகுதியில் 0.40மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

### அரியலூரில் பலத்த மழை

அரியலூரில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு தொடங்கிய மழை இரவு 7 மணி வரை தொடர்ந்தது. இதே போல் செந்துறை,திருமானூர்,கீழபழூர், உடையார்பாளையம், ஜயங்கொண்டம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பலத்த மழை கொட்டியது. இதனால் அனைத்து தரப்பினரும் மகிழ்ச்சியடைந்தனர்.

### அக்.30-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

அரியலூர் மாவட்ட ஆட்சியரகக் கூட்ட அரங்கில் வரும் 30 ஆம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியரகம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளது: அக். 30-ம் தேதி காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தலைமையில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்கள் விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவிக்கலாம்.

## பருத்தியில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த விழிப்புணர்வு முகாம்

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், அனுக்கூர் கிராமத்தில் தந்தை ரோவர் வேளாண்மை கல்லூரி இறுதியாண்டு பயிலும் மாணவிகள் சார்பில், பருத்தி பயிர்களில் பூச்சித் தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்த விழிப்புணர்வு முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. முகாமுக்கு தலைமை வகித்து, ரோவர் வேளாண்மை கல்லூரி பூச்சியியல் துறை மூத்த பேராசிரியர் ராஜீ பேசியது:

அனுக்கூர் கிராமம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் பருத்தி பயிரிடப்பட்டுள்ள பகுதிகளில் சாறு உறிஞ்சும் பூச்சி, அஸ்வினி பூச்சி ஆகியவற்றின் தாக்குதல் அதிகமாக உள்ளது. இதனால், பருத்தி பயிரில் பாதிப்பும் அதிகமாக ஏற்பட்டுள்ளது. இவற்றை கட்டுப்படுத்த மாலை நேரங்களில் விளக்கு பொறி வைப்பதுடன், 5 சதவீத வேப்பங்கொட்டை சாறு தெளித்து கட்டுப்படுத்தலாம். மேலும், சாறு உறிஞ்சும் பூச்சுகளின் நடமாட்டத்தை தடுக்க ஏக்கருக்கு 5 இடங்களில் மஞ்சள் விளக்கு ஒட்டுப்பொறியும், காய்ப் புழுக்களின் தாக்குதல் உள்ள இடங்களில் இனக் கவர்ச்சிப் பொறியும் வைத்து கட்டுபடுத்தலாம் என்றார் அவர்.

இதில், அனுக்கூர் கிராமத்தை சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட பருத்தி விவசாயிகளும், கிராம தங்கல் திட்டத்தின் கீழ் வேளாண்மை கல்லூரியை சேர்ந்த 10 மாணவிகளும் பங்கேற்றனர்.

## நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வியாழக்கிழமை (அக். 29) நடைபெற உள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் தரேஸ் அஹமது வெளியிட்ட செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஆட்சியர் தரேஸ் அஹமது தலைமையில் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு, ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமான நீர்ப்பாசனம், கடன் உதவிகள், வேளாண்மை இடுபொருள்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்படும். எனவே, பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரமுகர்கள் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவிக்கலாம்.

## தேனியில் பூக்கள் விலை சரிவு

தேனி சந்தைக்கு செவ்வாய்க்கிழமை பூக்களின் வரத்து அதிகமாக இருந்ததால், விலை சரிந்தது. மாவட்டத்தில் தேனி, உப்புக்கோட்டை, கூழையனூர், பூமலைக்குண்டு, தாடிச்சேரி, தப்புக்குண்டு, சீலையம்பட்டி, கோட்டூர் ஆகிய இடங்களில் பூக்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளைவிக்கப்படும் பூக்கள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட வெளி மாவட்டங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

சில நாள்களுக்கு முன், மாவட்டத்தில் பரவலாக தொடர்ந்து பெய்த மழையால், பூக்கள் சாகுபடியில் நல்ல மகசூல் கிடைத்துள்ளது. தற்போது, சந்தைக்கு பூக்கள் வரத்து அதிகரித்துள்ளதால் விலை சரிந்துள்ளது.

தேனி சந்தையில் பூக்கள் விலை விவரம் (கிலோவில்): மல்லிகைப் பூ- ரூ.70 முதல் ரூ.100 வரை, பிச்சிப் பூ ரூ.60, கனகாம்பரம் ரூ.200,

முல்லைப் பூ ரூ.150, செண்டுமல்லி ரூ.40, கோழிக்கொண்டை பூ ரூ.30, சம்பங்கி ரூ.100, துளசி ரூ.20.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**வடகிழக்கு பருவமழை இன்று தொடங்குகிறது; மழை, வெள்ள சேதங்களை தடுக்க தமிழக அரசு தீவிர நடவடிக்கை**



சென்னை,

தமிழகத்தில் கடந்த சில தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.குறிப்பாக தென்மாவட்டங்களில் சில இடங்களில் கனமழை பெய்துள்ளது.

வடகிழக்கு பருவமழை

வடகிழக்கு பருவமழை இன்று (புதன்கிழமை) தொடங்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது. \இந்த நிலையில், அனேக இடங்களில் தற்போது மழை பெய்ய தொடங்கி இருப்பதாகவும், இதன் காரணமாக வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று தெரிவித்துள்ளது.இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

காற்றழுத்த தாழ்வு பகுதி

இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி தொடர்ந்து அதே இடத்தில் நீடிக்கிறது. இன்னும் வலுப்பெறவில்லை. இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தை பொறுத்தவரையில், கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களில் மழை பெய்யும். மேலும், உள்மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்பு இருக்கிறது.

தற்போது அனேக இடங்களில் மழை பெய்ய தொடங்கி இருப்பதால், வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

கனமழைக்கு வாய்ப்பு

அடுத்த 48 மணி நேரத்தில், தமிழகத்தின் சில இடங்களில் கனமழை பெய்வதற்கான வாய்ப்புகளும் அதிகமாக இருக்கிறது. சென்னையை பொறுத்தவரையில், வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளது.

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி, செங்குன்றம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ. மழை பெய்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

கடலோர மாவட்டங்கள்

தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம், கடலூர், விழுப்புரம், தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பல பகுதிகளில் இன்று (புதன்கிழமை) கனமழை பெய்யும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் மற்ற பகுதிகளிலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

நாளை மற்றும் மறுநாளும் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்றும் வானிலை மைய அறிவிப்பில் கூறப்பட்டு உள்ளது.

தமிழக அரசு ஆலோசனை

இந்த நிலையில் வருவாய்த்துறையின் சார்பில், மாவட்டங்களில் பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வருவாய்த்துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் நேற்று ஆய்வு மேற்கொண்டார். வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலக வளாகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்தினை பார்வையிட்டார்.

பின்னர் வருவாய்த்துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில், வருவாய்த்துறை செயலாளர் ஆர்.வெங்கடேசன், முதன்மைச் செயலர், வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அதுல்யமிஸ்ரா, பேரிடர் மேலாண்மை இணை ஆணையர் ஆர்.லில்லி, சென்னை மாவட்ட

கலெக்டர் சுந்தரவல்லி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

விரிவான ஆய்வு

தென்மாவட்டங்களில் பெய்துள்ள கனமழை மற்றும் இடி மின்னல் காரணமாக, ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள், கால்நடைகள் மற்றும் வீடுகள் ஆகியவற்றிற்கான சேதங்களுக்கு, முதல்-அமைச்சர் ஜெயலலிதாவால் வழங்கப்பட்டுள்ள உடனடி நிவாரண உதவிகள் குறித்தும் வருவாய்த்துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

வடகிழக்கு பருவமழை தொடங்க இருப்பதை முன்னிட்டு, பல மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தால் எச்சரித்துள்ளதால், அதனை கருத்தில் கொண்டு, தொடர்புடைய மாவட்ட கலெக்டர்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக, அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் அறிவுரை வழங்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

நிவாரண பணிகள்

அதனை தொடர்ந்து அனைத்து மாவட்ட கலெக்டர்களின் நேர்முக உதவியாளர்கள் (பொது) பங்கேற்ற ஆய்வு கூட்டமானது வருவாய்த்துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் எழிலகம் வருவாய் கருத்தரங்க கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பருவமழை காலங்களில் போர்க்கால அடிப்படையிலான நிவாரண பணிகளை விரைந்து மேற்கொள்ளவும், பாதிக்கப்படும் வீடுகள், குடிசைகள், கால்நடைகள் ஆகியவற்றிற்கான இழப்பீடு உதவித்தொகையினை காலதாமதமின்றி விரைந்து வழங்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

## வடகிழக்கு பருவமழையையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்; சென்னை குடிநீர் வாரிய நிர்வாக இயக்குனர் அறிக்கை



சென்னை,

வடகிழக்கு பருவமழையையொட்டி எடுக்கப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சென்னை குடிநீர் வாரிய நிர்வாக இயக்குனர் அறிக்கை வெளியிட்டு உள்ளார்.

சென்னை குடிநீர் வாரிய நிர்வாக இயக்குனர் டாக்டர் பி.சந்திரமோகன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

புகார்கள் கண்காணிப்பு

வடகிழக்கு பருவ மழையை முன்னிட்டு சென்னைக் குடிநீர் வாரியத்தால் எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடந்தது. இதில் குடிநீர் வாரிய செயல் இயக்குனர் என்.சந்தீப், தலைமை, மேற்பார்வை மற்றும் அனைத்து பகுதி பொறியாளர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் அனைத்து பகுதி அலுவலகங்களுக்கும் ஒரு மேற்பார்வை பொறியாளர் சிறப்பு அலுவலராக பருவமழை காலத்தின்போது நியமிக்கப்பட்டு கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டது. கழிவுநீர் வழிந்தோடுதல், அடைப்புகள் மற்றும் குடிநீர் மாசு உள்ளிட்ட புகார்களை கண்காணிக்கவும், தங்களது பகுதிக்குட்பட்ட பகுதிகளை கண்காணிக்கவும், உடைந்த மற்றும் பழுதான கழிவுநீர் மூடிகளை மாற்றி, புதிதாக அமைப்பதற்கும்,

பராமரிப்பு பணிகளை துரிதப்படுத்துவதற்கும் பணிமனைப் பொறியாளர்கள் அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

நுகர்வோர் குறைதீர்ப்பு பிரிவு

பருவமழை காலத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் பிரதான குழாய்கள் தீவிரமாகக் கண்காணிக்க உத்தரவிடப்பட்டது. வாரியத்தின் அனைத்து அலுவலர்களும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் அழைப்புகளுக்கு உடனடியாக பதிலளிக்கவும், தலைமை அலுவலகத்திலுள்ள 24 மணி நேர நுகர்வோர் குறைதீர்ப்பு பிரிவு மற்றும் அனைத்து பகுதி அலுவலகங்களும் 3 ஷிப்டுகளில், அனைத்து வேலை நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் பணியாளர்கள் பணியில் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புகார்களை தெரிவிக்க விரும்புபவர்கள் 044-45674567 என்ற குடிநீர் வாரிய புகார் பிரிவு எண்ணில் தொடர்பு கொண்டு புகார்களைத் தெரிவிக்கலாம். மேலும் அந்தந்த பகுதி பொறியாளர்களை கீழ்க்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

8144930901 (பகுதி-1), 8144930902 (பகுதி-2), 8144930903 (பகுதி-3), 8144930904 (பகுதி-4), 8144930905 (பகுதி-5), 8144930906 (பகுதி-6), 8144930907 (பகுதி-7), 8144930908 (பகுதி-8), 8144930909 (பகுதி-9), 8144930910 (பகுதி-10), 8144930911 (பகுதி-11), 8144930912 (பகுதி-12), 8144930913 (பகுதி-13), 8144930914 (பகுதி-14), 8144930915 (பகுதி-15).

எரிபொருள் உதிரிபாகங்கள்

சென்னை குடிநீர் வாரியத்திலுள்ள தர உறுதிப் பிரிவால் மழைக் காலங்களில் குடிநீரில் எஞ்சியுள்ள குளோரின் அளவைப் பரிசோதிப்பது நாளொன்றுக்கு 100-ல் இருந்து 150 இடங்களாகவும் நுண்ணுயிர் சோதனை 60-ல் இருந்து 80 இடங்களாகவும் அதிகரிக்கப்படும். கழிவு

நீரேற்று நிலையங்கள் மின்சாரம் தடைபட்ட நேரங்களில் கூட மின் ஆக்கிகளின் உதவியுடன் தொடர்ச்சியாக இயங்கவும், தேவையான எரிபொருள் உதிரிப் பாகங்களை சேமித்து வைக்கவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியின் நிவாரண மையங்களுக்கு மாநகராட்சி அலுவலர்களின் கோரிக்கையின் பேரில் குடிநீர் உடனடியாக அனுப்பி வைப்பதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீர் பகிர்மான நிலையங்கள் மற்றும் பணிமனைகளில் தேவையான அளவு படிகாரம், பிளீச்சிங் பவுடர், குளோரின் வாயு மற்றும் குளோரின் மாத்திரைகள் வைக்கப்பட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பிளாஸ்டிக் மறு சுழற்சி எந்திரத்தை கலெக்டர் தொடங்கி வைத்தார்



அரியலூர்,

அரியலூரில் பிளாஸ்டிக் மறு சுழற்சி எந்திரத்தை கலெக்டர் சரவணவேல்ராஜ் தொடங்கி வைத்தார்.

பிளாஸ்டிக் மறு சுழற்சி எந்திரம்

அரியலூர் பழைய ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் ஊரக வளர்ச்சி முகமை மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் கீழப்பழூர்

பஞ்சாயத்து அளவிலான குழு கூட்டமைப்பினருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பிளாஸ்டிக் மறு சுழற்சி செய்யும் எந்திரத்தை மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் தொடங்கி வைத்து பேசினார்.அப்போது அவர் பேசியதாவது :-உயிரியல் முறையில் மக்காத தன்மை கொண்ட கழிவுகள் மக்காத கழிவுகளாகும். இவற்றில் மறு சுழற்சி செய்ய கூடிய பிளாஸ்டிக் உள்ளிட்ட பொருட்கள் மறு சுழற்சி செய்து பொருளாதார மதிப்பினை மீளப்பெற திட்டக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தேவைக்கேற்ப ஒரு நறுக்கும் எந்திரம், ஒரு தூய்மைப்படுத்தும் எந்திரமும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்ஃபட்டுள்ளது. இதில் கீழப்பழூர் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பை சார்ந்த குழு பெண்களுக்கு பிளாஸ்டிக்கை மறு சுழற்சி செய்யும் எந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த எந்திரத்தினை பயன்படுத்தி பிளாஸ்டிக் கழிவுகள் மதிப்பினை கூட்டுவதன் மூலம் சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் அதிக வருவாய் பெறலாம்.

தூய்மையாக வைக்கலாம்

எனவே இந்த தொழிலை சிறப்பாக செய்து நல்ல வருமானம் பெற்று ஊராட்சியினை தூய்மையாக வைத்து கொள்வதோடு, வாழ்வாதாரத்தை பெருக்கி கொள்ளவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சரஸ்வதி கணேசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செந்தில், உதவி திட்ட அலுவலர் மெய்யப்பன், உதவி இயக்குனர் (பஞ்சாயத்து) அமிர்தலிங்கம், புதுவாழ்வு திட்ட மாவட்ட மேலாளர் சுதாதேவி, உதவி திட்ட அலுவலர் ஞானபிரகாசம், அரியலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கபிலன், சேகர் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## நெகமம் பகுதியில் தென்னை மரங்களில் வேகமாக பரவும் வாடல் நோய் வேளாண்துறையினர் ஆலோசனை வழங்க விவசாயிகள் கோரிக்கை



நெகமம்,

நெகமம் பகுதியில் தென்னை மரங்களில் வாடல் நோய் வேகமாக பரவி வருகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். தென்னை மரங்களை காப்பாற்ற ஆலோசனை வழங்குமாறு வேளாண்துறைக்கு கோரிக்கை விடுத்து உள்ளனர்.

வாடல் நோய் தாக்குதல்

நெகமம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளான சின்ன நெகமம், அய்யம்பாளையம், கொண்டேகவுண்டன்பாளையம், ஆவலப்பம்பட்டி, ஜக்கார்பாளையம், பூசாரிபட்டி, கள்ளிபட்டி உள்பட பல்வேறு பகுதிகளில் பரவலாக தென்னை விவசாயம் செய்யப்பட்டு உள்ளது. இந்த பகுதிகளில் சுமார் 20 லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. போதிய மழை இல்லாததால், தென்னை மரங்கள் வறட்சியை தாக்குப்பிடிக்க முடியாமல் கருக தொடங்கின.

இந்த மரங்கள் முழுமையாக கருகி விடாமல் இருக்க சொட்டு நீர்பாசனம் அமைத்து தண்ணீரை விலைக்கு வாங்கி விவசாயிகள் ஊற்றி

வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்பு மழை பெய்த போதிலும் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. தொடர்ந்து வெயில் அடித்து வருவதால் நெகமம் பகுதியில் உள்ள தென்னை மரங்களில் வாடல் நோய் தாக்க தொடங்கி உள்ளது. இதன்காரணமாக மரங்களில் உள்ள பச்சை மட்டைகள் வாடத்தொடங்கி விட்டன.

விவசாயிகள் கவலை

வாடல் நோய் தென்னை மரங்களை சிறிது, சிறிதாக அழித்து விடும் என்பதாலும், அது வேகமாக மற்ற மரங்களுக்கும் பரவி விடும் என்பதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். மேலும், வாடல் நோய் தாக்கி உள்ள மரங்களை கண்டறிந்து அதனை வெட்டி அகற்றி வருகின்றனர். ஏற்கனவே வறட்சியால் தென்னை மரங்கள் கடுமையாக பாதிப்பு அடைந்து உள்ள நிலையில் தற்போது வாடல் நோய் பரவி உள்ளதால் நெகமம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் வேதனை அடைந்து உள்ளனர்.மேலும், வாடல் நோய் தென்னை மரங்களை தாக்காமல் இருக்க கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் குறித்தும், வாடல் நோய் தாக்கினால் அதற்கு எத்தகைய மருந்து மற்றும் உரங்களை தெளிக்க வேண்டும் என்று வேளாண்மை துறை அதிகாரிகள் ஆலோசனை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## புதுச்சேரியில் இடியுடன் பலத்த மழை



புதுவையில் நேற்று இரவு இடியுடன் பலத்த மழை பெய்தது. பருவமழை

வடகிழக்கு பருவமழை இன்று (புதன்கிழமை) தொடங்கும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இந்தநிலையில் இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுநிலை அதே இடத்தில் தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்தநிலையில் நேற்று மாலை புதுவையில் வானில் கருமேகங்கள் வலம் வர தொடங்கின. அப்போது சாரல் அடித்தது போன்று லேசன மழைத்தூறல்களும் விழுந்தவண்ணம் இருந்தன.

இடி-மின்னல்

இந்தநிலையில் இரவு 9மணி அளவில் பலத்த காற்று வீசியது. தொடர்ந்து இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இந்த மழை காரணமாக ரோடுகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கியது. இரவு முழுவதும் அவ்வப்போது மழை பெய்துகொண்டே இருந்தது. புதுவை நகரம்

மட்டுமல்லாது புறநகர் பகுதிகளிலும் காற்றுடன் மழை பெய்தது.இந்த மழை காரணமாக இரவில் இதமான சூழ்நிலை நிலவியது.

## திண்டுக்கல்லில் தரமற்ற மீன் விற்பனையா? உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் சோதனை



திண்டுக்கல்,

திண்டுக்கல் நகரில் தரமற்ற மீன்கள் விற்பனை செய்யப்படுவதாக, உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையினருக்கு புகார் வந்தது. இதைத்தொடர்ந்து மாவட்ட நியமன அலுவலர் சாம் இளங்கோ தலைமையில், உணவு பாதுகாப்பு அலுவலர்கள் லாரன்ஸ், செல்வம் ஆகியோர் திண்டுக்கல் சோலைஹால் தெரு மீன் மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிற மீன்களை சோதனை செய்தனர்.

தரமான மீன், தரமற்ற மீன் ஆகியவற்றின் வேறுபாடுகள் குறித்து வியாபாரிகளுக்கு அதிகாரிகள் எடுத்துரைத்தனர். மேலும் மீன்கள்

கெட்டுப்போகாமல் இருப்பதற்கு பதப்படுத்தும் முறை பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதேபோல் திண்டுக்கல் நகரில் விற்பனை செய்யப்படுகிற எண்ணை கடைகளையும் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். மேலும் பல்வேறு வண்ணங்களில் விற்கப்படுகிற வடாகம், அப்பளம் ஆகியவற்றின் மாதிரிகளை சேகரித்து அதிகாரிகள் ஆய்வுக்காக மதுரைக்கு அனுப்பி வைத்தனர்.

## வண்டலூர் உயிரியல் பூங்காவில் காட்டுமாடுகள் கன்றுகளை ஈன்றன



வண்டலூர்,

வண்டலூர் உயிரியல் பூங்காவில் உள்ள ரேமா என்ற 4 வயது காட்டு மாடு தனது முதல் ஈனுவாக கடந்த 8–ந்தேதி அன்று ஒரு ஆண் கன்றை ஈன்றது. அதே போல கடந்த 15–ந்தேதி காவேரி என்ற 6 வயது மற்றொரு காட்டு மாடு 3–வது ஈனுவாக ஒரு பெண் கன்றை ஈன்றுள்ளது. தற்போது

பிறந்துள்ள இந்த கன்றுகளின் தந்தை இந்த பூங்காவில் பிறந்து வளர்ந்த விஜய் என்ற 9 வயது ஆண் காட்டு மாடு ஆகும்.

புதிதாக பிறந்துள்ள இந்த கன்றுகளுடன் சேர்த்து பூங்காவிலுள்ள காட்டு மாடுகளின் எண்ணிக்கை 12 ஆண் மற்றும் 9 பெண் என்று மொத்தம் 21–ஆக உயர்ந்துள்ளது. தற்போது கன்று ஈன்றுள்ள தாய்க்கு சிறப்பு உணவுகளாக தேங்காய், கடலைப்புண்ணாக்கு, கொண்டைக்கடலை, வாழைப்பழம், கீரை, சுரக்காய் போன்றவை கூடுதலாக வழங்கப்படுகிறது. உயிரியல் பூங்கா நிர்வாகம் சிறப்பு கவனம் செலுத்தி தாயையும், கன்றையும் கண்காணித்து வருகிறது.

## வேளாண் காடுகளுடன் கால்நடைகளை ஒருங்கிணைத்தல் குறித்த பயிற்சி 3-ந் தேதி நடக்கிறது




நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் அடுத்த மாதம் (நவம்பர்) 3-ந் தேதி காலை 9 மணிக்கு “வேளாண் காடுகளுடன் கால்நடைகளை ஒருங்கிணைத்தல்” என்ற தலைப்பில் ஒருநாள் இலவசப் பயிற்சி

நடைபெற உள்ளது. இந்த பயிற்சியில் வேளாண் காடுகளின் முக்கியத்துவம், வேளாண் காடுகளின் வகைகள், வேளாண் காடுகளில் வளர்க்கக்கூடிய வணிகரீதியான மரவகைகள், தீவன மரங்கள், பழ மரங்கள் மற்றும் தீவனப்பயிர்கள் சாகுபடி, இவற்றுடன் கால்நடைகளை ஒருங்கிணைத்தல் குறித்த விரிவான பயிற்சி அளிக்கப்படும். மேலும் மரவகைகளில் நாற்று உற்பத்தி குறித்த செயல்விளக்கப் பயிற்சியும் அளிக்கப்படும்.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வம் உள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பம் உள்ளவர்கள் நாமக்கல் - மோகனூர் சாலையில் 7-வது கிலோமீட்டரில் அமைந்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ வருகிற 2-ந் தேதிக்குள் பெயரை கண்டிப்பாக முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒரு செய்திக்குறிப்பில் தெரிவித்து உள்ளார்.

## கூடலூரில் ஆதிவாசி மக்கள் கொண்டாடிய நெற்கதிர் அறுவடை திருவிழா கோவிலில் வைத்து வழிபாடு நடத்தினர்



கூடலூர்,

கூடலூரில் ஆதிவாசி மக்கள் நெற்கதிர் அறுவடை திருவிழாவை நேற்று கொண்டாடினர். மேலும் அறுவடை செய்த கதிர்களை கோவிலில் வைத்து வழிபாடு நடத்தினர்.

## நெற்கதிர் அறுவடை திருவிழா

நீலகிரி மாவட்டத்தில் கோத்தர், பனியர், தோடர், இருளர், குரும்பர் உள்பட பல்வேறு இன ஆதிவாசி மக்கள் வசித்து வருகிறார்கள். இவர்கள் தங்களது பாரம்பரிய திருவிழாக்களை கொண்டாடி வருகிறார்கள். கூடலூரில் வசிக்கும் ஆதிவாசி மக்கள்– மவுண்டாடன் செட்டி சமூகத்தினர் இணைந்து ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் 10–ந் தேதி நெல் அறுவடை திருவிழாவை கொண்டாடி வருகின்றனர்.

இதற்காக ஆடி மாதம் நெல் விவசாயத்தை தொடங்குகின்றனர். 3 மாதத்தில் விளைகின்ற நெற்கதிர்களை இறைவனுக்கு படையலிட்டு பூஜை செய்து வணங்கும் நாளை புத்தரி எனும் நெல் அறுவடை திருவிழாவாக கொண்டாடுகின்றனர். இந்த திருவிழாவுக்காக ஆதிவாசி மக்கள் விரதமும் இருப்பார்கள்.

## வழிபாடு

இந்த நிலையில் நேற்று கூடலூர் புத்தூர்வயல் பகுதியில் நெற்கதிர் திருவிழா கொண்டாடப்பட்டது. இதையொட்டி நேற்று காலை விளைந்த நெற்கதிர்களை மேளதாளங்கள் முழங்க ஆதிவாசி மக்கள் அறுவடை செய்தனர். பின்னர் வழிபாடு நடத்தி அறுவடை செய்த கதிர்களை ஒன்றாக கட்டி தலையில் சுமந்தவாறு ஊர்வலமாக தங்களது குல தெய்வ கோவிலுக்கு எடுத்து சென்றனர்.

அங்கு நெற்கதிர்களை வைத்து சிறப்பு பூஜை செய்து வழிபட்டனர். அப்போது பட்டாசுகள் வெடித்து தங்களது பாரம்பரிய முறைப்படி நடனமாடினர். இதில் கூடலூர் சுற்றுவட்டார பகுதிகளில் வசிக்கும் ஆதிவாசி பெண்கள் கலந்து கொண்டனர்.

## வெளிநாட்டு பயணிகள்

பின்னர் நெற்கதிர் கட்டுகளை 3 ஆக பிரித்து புத்தூர்வயல் மகாவிஷ்ணு, மங்குழி பகவதி அம்மன் கோவில்களில் வைத்து பூஜை செய்வதற்காக

நெற்கதிர் கட்டுகள் அனுப்பப்பட்டது. மீதமுள்ள நெற்கதிர்கள் நம்பாலக்கோட்டை ஸ்ரீவேட்டைக்கார சிவன் கோவிலுக்கு கொண்டு ஆதிவாசி மக்கள் ஊர்வலமாக தலையில் சுமந்தவாறு எடுத்து சென்றனர். அங்கு வேட்டைக்கார சிவனுக்கு நெற்கதிர்கள் படையலிட்டு ஆதிவாசி மக்கள் வழிபட்டனர். தொடர்ந்து ஆதிவாசி மக்கள் மேளதாளம் முழங்க பாரம்பரிய நடனமாடினர்.

இதனை வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் சிலர் ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர். விழாவில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். பின்னர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதுடன், நெற்கதிர்களை பிரசாதமாக கொடுத்தனர்.

இது குறித்து ஆதிவாசி மக்கள் கூறியதாவது:–

தங்களது முன்னோர் காலத்தில் இருந்து பாரம்பரியமாக நெல் அறுவடை திருவிழா கொண்டாடி வருகிறோம். தற்போது போதிய மழை இல்லாமல் நெற்பயிர்கள் சரிவர விளைச்சல் இல்லை. இதுமட்டுமின்றி விவசாய நிலங்கள் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு வருவதால் எதிர்காலத்தில் பூர்வீகமாக கொண்டாடி வரும் அறுவடை திருவிழா மறைந்து விடும் நிலையில் உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

### ஊட்டியில் மழை



ஊட்டி,

ஊட்டி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை இல்லாமல் கடும் வெயில் அடித்து வந்தது. இதன் காரணமாக இரவில் பனிப்பொழிவு இருந்தது. வெப்பநிலை 7 டிகிரி செல்சியஸ் வரை குறைந்தது. இந்த நிலையில் நேற்று காலை முதல் ஊட்டி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. அதன் பின்னர் மாலை 4 மணிக்கு திடீரென்று மழை பெய்ய தொடங்கியது. பலத்த மழையாக பெய்யாமல் தூறிக்கொண்டே இருந்தது.

இதனால் பொதுமக்கள் குடைகளை பிடித்தபடியே நடந்து சென்றனர். மேலும் திடீரென்று மழை பெய்ததால் பள்ளி முடிந்து வந்த மாணவ–மாணவிகள் சிரமப்பட்டனர். இதுமட்டுமின்றி ஊட்டிக்கு நேற்று வந்திருந்த சுற்றுலா பயணிகள் சாரல் மழையில் நனைந்தபடியே இயற்கை காட்சிகளை கண்டு ரசித்தனர். இந்த மழை தொடர்ந்து பெய்யுமா? என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். மேலும் கூடலூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளிலும் நேற்று மாலை மழை பெய்தது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் உயர தொடங்கியது



மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர தொடங்கியது.

<u>மிதமான மழை</u>

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் தீவிரமாக மழை பெய்து வருவதை அடுத்து, மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு கடந்த 2 தினங்களுக்கு முன்பு வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடியில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. இந்த நிலையில் சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டத்தில் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மிதமான மழை பெய்து வருவதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நேற்று சற்று அதிகரித்துள்ளது.

அதாவது கடந்த 3 தினங்களுக்கு முன்பு வினாடிக்கு 2 ஆயிரத்து 500 கனஅடி வீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு 3 ஆயிரத்து 310 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையில் இருந்து

டெல்டா மற்றும் கால்வாய் பாசனத்திற்காக வினாடிக்கு 2 ஆயிரத்து 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

<u>உயர தொடங்கியது</u>

இந்த நிலையில், அணையில் இருந்து தண்ணீர் திறக்கும் அளவை விட நீர்வரத்து அதிகரித்து உள்ளதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் சற்று மெதுவாக உயர தொடங்கி உள்ளது. நேற்று முன்தினம் 60.81 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று 60.89 அடியாக உயர்ந்துள்ளது.

இந்த நீர்வரத்து மேலும் அதிகரிக்குமானால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர வாய்ப்பு உள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

### பருவ மழையை சமாளிக்க குடிநீர் வாரியம் சிறப்பு ஏற்பாடு

வடகிழக்கு பருவமழையை சமா ளிக்க சிறப்பு ஏற்பாடுகளை குடிநீர் வாரியம் செய்துள்ளது. புகார்களை 044 45674567 என்ற எண்ணில் பதிவு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருவமழைக்கால முன்னெச் சரிக்கை ஏற்பாடுகள் குறித்து குடிநீர் வாரிய அலுவலகத்தில் நிர்வாக இயக்குநர் பி.சந்திரமோகன் தலைமையில் நேற்று கூட்டம் நடைபெற்றது. இதில் அனைத்து பகுதி அலுவலகங்களுக்கும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் சிறப்பு அலுவலராக பருவமழைக் காலத்தின்போது நியமிக்கப்பட்டு அப்பகுதியைக் கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டது.

வாரியத்தின் அனைத்து அலுவ லர்களும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் அழைப்புகளுக்கு உடனடியாக பதிலளிக்க அறிவுறுத் தப்பட்டுள்ளது. தலைமை அலுவல கத்தில் உள்ள 24 மணி நேர நுகர்வோர் குறைதீர்வுப் பிரிவும், அனைத்து பகுதி அலுவலகங் களும்

அனைத்து நாட்களும் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. புகார்களை தெரிவிக்க விரும்பு பவர்கள் குடிநீர் வாரியத்தின் புகார் பிரிவுக்கு 45674567 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். மழைக் காலங்களில் குடிநீரில் உள்ள குளோரின் அளவைப் பரிசோதிப்பது நாளொன்றுக்கு 100-லிருந்து 150 இடங்களாகவும் நுண்ணுயிர் சோதனை 60-லிருந்து 80 இடங்களாகவும் அதிகரிக்கப்படும் என்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## பயங்கர நிலநடுக்கங்கள் பூமியின் மேல் ஓட்டை மாற்றவல்லது: ஆய்வு

பூகம்பங்கள் அது ஏற்பட்ட இடத்திலிருந்து 6,000 கிமீ தொலைவுக்கு பூமி மேல் ஓட்டின் நெகிழ்வுத் தன்மை கொண்ட அம்சங்களை மாற்றவல்லது என்று புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. அதாவது சில வாரங்களுக்கு அழுத்தங்களை தாங்கும் ஆற்றல் இல்லாமல் செய்து விடுகிறது என்கிறது புதிய ஆய்வு ஒன்று. அதாவது, பூமி என்பது ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்ட இயங்குவிசை கொண்ட ஒரு ஒழுங்கமைப்பு. இதில் மிகப்பெரிய பூகம்பங்கள் அது ஏற்பட்ட இடத்திலிருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தூரமுள்ள பகுதிகளில் கூட அலைத்தொடரான நிகழ்வுகளை உருவாக்கவல்லது என்கிறது இந்த ஆய்வு.

"பூகம்பங்கள் புவி மேல் ஓட்டின் நெகிழ்ச்சியான அம்சங்களை சுமார் 6,000 கிமீ தொலைவுக்கு மாற்றியமைக்கிறது. சில வாரங்களுக்கு அழுத்தத்தை தாங்கக்கூடிய அதன் சக்தியை குறைக்கிறது” என்று மாஸசூசெட்ஸ் தொழில்நுட்ப துறையின் புவிமைய, வானியல் விஞ்ஞானப் பிரிவின் ஆய்வாளர் கெவின் காவோ தெரிவித்துள்ளார்.

பூகம்பத்திலிருந்து புறப்படும் மேல்பகுதி ஆற்றல் அலைகள் மற்றொரு புவிப்பாறை பிளவின் ஊடாக கடக்கும் போது, பூமியின் மேற்பகுதியை பிணைத்து இறுக்கிக் காக்கும் உராய்வு அம்சங்களுக்கு இடையேயான

சமநிலையை மாற்றியமைக்கிறது. மேலும், நெகிழ்ச்சித் தன்மையை அனுமதிக்கும் புவி மேல் ஓட்டின் அழுத்த தாங்கி அமைப்பையும் மாற்றி அமைக்கிறது. அழுத்த நிலை இதனை தோல்வியடையச் செய்து விடுகிறது. எனவே மேல்புற ஆற்றல் அலைகள் கடந்து செல்லும் போது, புவி ஓட்டின் இத்தகைய குணாம்சங்கள் மாற்றி அமைக்கப்படுகிறது அல்லது முற்றிலும் மாறிவிடுகிறது. அதிக ஆற்றல் சேமிப்புடன் இருக்கும் தொடர்பாறை அல்லது பெரும்பாறை பலவீனமடையத் தயாராக இருக்கும் சூழலில் இந்த ஆற்றல் அலைகள் கடப்பினால் மேலும் ஆற்றலை தன்னிலே சேமிக்க நேரிடுகிறது. இதனால் எந்த நேரத்திலும் பூகம்பம் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. இதனை இந்த ஆய்வாளர்கள் பூகம்பத்தின் புலம்பெயர்வு என்று வர்ணிக்கின்றனர். இதனால்தான் நேபாள் பூகம்பத்தையடுத்து அதன் அலைகள் கடந்து சென்ற மேற்குப் பகுதியில் அடுத்த பெரிய பூகம்பம் ஏற்படலாம் என்று கணிக்கப்பட்டது. இந்தியப் பெருங்கடலில் சுமத்ரா தீவுக்கு அருகே ஏற்பட்ட 8.6 பூகம்பத்தை அடுத்து இந்த ஆய்வாளர்கள் பல்வேறு உயர் தொழில்நுட்பங்களைக் கொண்டு அதன் போக்கை ஆராய்ந்தனர். “இந்தியப் பெருங்கடல் பூகம்பம் ஏற்பட்ட போது, மேல்புற ஆற்றல் அலை ஜப்பானுக்கு வடகிழக்கு பகுதியின் ஊடாக கடந்தது. இதனால் அப்பகுதியில் பூகம்ப நடவடிக்கை அதிகரித்தது” என்கிறார் காவோ. ஏற்கெனவே 2011 ஜப்பானிய மகா பூகம்பத்தினால் பூமியின் மேல் ஓடு நெருக்கடிக்குள்ளானது. இதனையடுத்து நிறைய நில நடுக்கங்கள் ஏற்பட்டன. எனவே பெரிய பூகம்பங்களுக்குப் பிறகு வெளிப்படும் ஆற்றல் அலைகள் கடந்து போகும் பாதை அடுத்தடுத்த பூகம்ப நிகழ்வுகளை தீர்மானிக்கின்றன என்கிறது இந்த ஆய்வு.

## 82 ஆயிரம் டன் பறிமுதல்: பருப்பு விலை_ ரூ.20 சரிவு



12 மாநிலங்கள் எடுத்த அதிரடி நடவடிக் கையால் பதுக்கப்பட்ட 82 ஆயிரம் டன் பருப்பு வகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதனால், துவரம், உளுந்து பருப்புகளின் விலை நாடு முழுவதும் குறையத் தொடங்கி உள்ளது.

பருப்பு பதுக்கல் மீது நடவடிக்கை எடுக்க இதுவரை 8,394 அதிரடி சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் பறிமுதல் செய்யப்பட்ட பருப்புகள் அடுத்தவாரம் முதல் சந்தையில் கிடைக்கும் என மாநில அரசுகள் தெரிவித்துள்ளன. இதனால், விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது. நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சக தகவலின்படி சில்லறை விலையில் கிலோ ரூ. 210க்கு விற்பனை செய்யப்பட்ட துவரம் பருப்பு ரூ.190-க்கு விற்பனையாகிறது.

மொத்த விற்பனை விலை ரூ.181 ஆக உள்ளது. உளுந்து விலை கிலோவுக்கு ரூ.8 குறைந்து சில்லறை விலையில் ரூ.190-க்கு விற்கப்படுகிறது. “நாடு முழுவதும் சுமார் 8,394 சோதனைகள் மூலம், 82 ஆயிரத்து 462.53 டன் பருப்புகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சில மாநில அரசுகள் அரசு, கூட்டுறவு அமைப்புகள் மூலம் பருப்பு விற்பனையைத் தொடங்கியுள்ளன. மொத்த சந்தையில் பருப்பு விலை குறையத் தொடங்கியுள்ளது” என அதிகாரப்பூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரத்தில் அதிகபட் சமாக 57,455 டன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அங்கு கடந்த வாரம் மொத்த விலையில் கிலோ ரூ.200க்கு விற்கப்பட்ட துவரம் பருப்பு தற்போது ரூ.152 ஆக குறைந்துள்ளது என அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

விகடன்

**அமெரிக்காவில் முன்மாதிரி விவசாயத்தில் கலக்கும் இந்திய பெண்ணுக்கு விருது!**

**ஹூஸ்டன்:** அமெரிக்காவில் இயற்கை விவசாயம் செய்துவரும் இந்திய வம்சாவளிப் பெண்ணுக்கு வெள்ளை மாளிகை, விருது வழங்கி கௌரவித்துள்ளது.

அமெரிக்காவின் புரூக்ளின் பகுதியில் சமூக சேவை புரிந்து வந்தவர் அனிதா அடல்ஜா. இந்திய வம்சாவளி பெண்மணியான இவர், விவசாயத்திலும் ஈடுபட்டார். இதற்காக 'ஆர்காடியா மையம்' என்ற

பெயரில் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார்.

நவீன முறையில் விவசாயத்தில் ஈடுபட்டு வரும் அனிதா அடல்ஜா, மண்வளம் மற்றும் நீர்வள மேம்பாடு, பசுமைக்கூட வாயு குறைப்பு உள்ளிட்ட பல்வேறு முன்மாதிரி பணிகளை மேற்கொண்டார். இதனால் 'மாற்றத்துக்கான சாதனையாளர்' என்ற உயரிய விருதுக்கு, வெள்ளை மாளிகை இவரை தேர்ந்தெடுத்தது.அத்துடன் விவசாயத்தில் சாதனை புரிந்த மேலும் 11 பேர் இந்த விருதுக்காக தேர்வு செய்யப்பட்டு, இவர்களுக்கான விருது நேற்று இரவு வழங்கப்பட்டது. விருது பெற்ற அனிதா அடல்ஜா, அமெரிக்காவின் வேறு சில இடங்களிலும் முன்மாதிரி வேளாண்மைப் பணிகளை மேற்கொண்டிருப்பதும், அவற்றின் மூலம் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

தினகரன்

**தமிழகத்தில் இன்று தொடங்குகிறது வடகிழக்கு பருவமழை: பல மாவட்டங்களில் நேற்று இரவே மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி**




சென்னை: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கும் நிலையில் நேற்று இரவே பல மாவட்டங்களில் பரவலாக மழை பெய்தது. வடகிழக்கு பருவமழை அக்டோபர் 28ம் தேதி தொடங்கும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்த நிலையில், இலங்கையொட்டிய தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி ஒன்று உருவானது. இதனால் இன்று பருவமழை தொடங்குவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இந்நிலையில் நேற்று மாலை முதலே திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், வருசநாடு, திருவையாறு உள்ளிட்ட இடங்களில் கனமழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சென்னை நகர் மற்றும் புறநகர் பகுதியில் ஒரு சில இடங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. இன்று கனமழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால், முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

# 11 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு



சென்னை: தென் மேற்கு பருவமழை கடந்த 20ம் தேதி முதல் முடிவுக்கு வந்ததை அடுத்து தமிழகத்தில் வட கிழக்கு பருவமழை காலம் தொடங்கியுள்ளது. இதற்கு ஆதாரமாக, தென் கிழக்கு வங்கக் கடல் பகுதியில் கடந்த 4 நாட்களுக்கு முன்பு ஒரு காற்றழுத்தம் உருவானது. அது மெல்ல வலுவடைந்து காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறி வருகிறது. அது தற்போது மேலும் வலுவடைந்துள்ளதால் இன்று தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யும். பிற மாவட்டங்களில் மிதமான மழை பெய்யும். வங்கக் கடல் மற்றும் குமரிக் கடல் பகுதியில் மணிக்கு 45 கிமீ முதல் 55 கிமீ வேகத்தில் காற்று வீசும் என்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர். பருவமழை தொடங்க உள்ளதை அடுத்து வெள்ள அபாயங்களை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகள் உஷார்படுத்தப்பட்டுள்ளன. வெள்ள தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

## முட்டை விலை 334 காசாக உயர்வு



**நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 334 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டலத்தில் நேற்றும் முட்டை விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. முட்டையின் பண்ணைகொள்முதல் விலையில், 5 காசுகள் உயர்த்தப்பட்டு ஒரு முட்டையின் விலை 334 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வடமாநிலங்களில் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதால் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளது.**

கறிக்கோழி 10 நாளில் கிலோவிற்கு ரூ. 35 உயர்வு




கோவை: தமிழகத்தில் கடந்த 17ம் தேதி வரை புரட்டாசி மாதம் நிலவியதால் இறைச்சி நுகர்வு குறைந்தது.இதனால்,சில்லரை விற்பனை நிலையங்களில் 17ம் தேதி வரை கறிக்கோழி விலை கிலோ ரூ. 110க்கு விற்றது. கடந்த 18ம் தேதி ஐப்பசி மாதம் துவங்கியவுடன் நுகர்வு அதிகரித்தது. அன்று ரூ. 125 ஆகஇருந்தது ஒரே நாளில் கிலோவிற்கு ரூ. 15 உயர்ந்தது. பின்னர் கடந்த 22ம் தேதி ரூ. 130 ஆகவும், 24ம் தேதி ரூ. 135 ஆகவும், நேற்று ரூ. 145 ஆகவும் உயர்ந்தது. கடந்த 10 நாளில் கிலோவிற்கு ரூ. 35 வரை உயர்ந்துள்ளது. எனினும் கோவையிலுள்ள

பெரும்பாலான சில்லரை விற்பனை கடைகளில் மேலும் ரூ. 5 அதிகரித்து ரூ. 150க்கு விற்றனர்.

**1 லட்சம் ஏக்கர் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பதில் தாமதம் பருவ மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருப்பு பெரியாறு அணை நீர் கடந்த ஆண்டைவிட 13 அடி குறைவு**

மதுரை, : ஒரு லட்சம் ஏக்கர் பாசனத்துக்காக பருவ மழையை எதிர்பார்த்து மதுரை மாவட்ட விவசாயிகள் காத்திருக்கின்றனர். முல்லை பெரியாறு அணை நீர்மட்டம் கடந்த ஆண்டு இதே நாளில் இருந்ததை விட 13 அடி குறைவாக உள்ளது. தென்மேற்கு பருவ மழை இந்த ஆண்டு வழக்கத்தை விட 40 சதவீதம் குறைவாகவே பெய்துள்ளது. வடகிழக்கு பருவ மழை வழக்கமாக அக்டோபர் முதல் வாரம் ஆரம்பமாகி விடும். ஆனால் இன்னும் கண்ணாமூச்சி காட்டி வருகிறது. காற்றழுத்த தாழ்வு நிலையால் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. அதுவும் முல்லை பெரியாறு, வைகை அணை பகுதிகளில் பெய்யவில்லை.நேற்றைய நிலவரப்படி பெரியாறு அணை நீர்மட்டம் 119.10 அடியாக உள்ளது. கடந்த 2014ம் ஆண்டு இதே நாளில் 132 அடியாக இருந்தது. தற்போது 13 அடி குறைவாக உள்ளது. மதுரை மாவட்டத்தில் பெரியாறு அணை பாசன ஒருபோக ஆயக்கட்டு மேலூர் பகுதி மற்றும் திருமங்கலம் கால்வாய் பகுதிகளில் மொத்தம் 1 லட்சம் ஏக்கர் உள்ளது. இவற்றின் பாசனத்துக்கு செப்டம்பர் 15ம் தேதி தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். 43 நாட்கள் கடந்தும் இன்னும் ஒருபோக பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. 45 ஆயிரம் ஏக்கர் இருபோக ஆயக்கட்டு பகுதிக்கு மட்டும் முறை வைத்து தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.
1 லட்சம் ஏக்கர் ஒரு போக பாசனத்திற்கு தண்ணீர் திறக்க பெரியாறு அணை நீர் 6 ஆயிரம் மில்லியன் கன அடி நீர் இருக்க வேண்டும். தற்போது 4 ஆயிரம் மில்லியன் கன அடிக்கும் குறைவாகவே உள்ளது. மழையின்றி கண்மாய்களிலும் தண்ணீர் இல்லை. நிலத்தடி நீரும்

தாழ்ந்துள்ளது.வடகிழக்கு பருவ மழை எப்போது ஆரம்பமாகும்? நீடித்து பெய்து பாசனத்துக்கு கை கொடுக்குமா? என்ற எதிர்பார்ப்புடன் விவசாயிகள் காத்திருக்கின்றனர். பெரியாறு அணை, தேக்கடி, வைகை அணை பகுதிகளில் நேற்று முன்தினம் மழையே பெய்யவில்லை. நேற்று பகலிலும் அதே நிலையே நீடித்தது. பொதுப்பணித்துறையினர் கூறும்போது, “பருவ மழை இன்று தொடங்கும் என்று வானிலை அறிவிப்பு வெளியாகி உள்ளது, எனவே மழை நிச்சயம் கை கொடுத்து, பாசனத்துக்கு தண்ணீர் கிடைத்து விடும்” என்றனர்.

**கால்நடைகளுக்கு மாற்று தீவனம் அசோலா அதிகாரிகள் தகவல்**

மதுரை, : கால்நடைகளுக்கு தேவையான தீவன பற்றாக்குறையை சமாளிக்க அசோலா செடியை மாற்று தீவனமாக பயன்படுத்தலாம் என கால்நடைதுறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மதுரை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பருவநிலை மாற்றத்தால் விவசாய மேச்சல் நிலங்களில் பரப்பளவு குறைந்து உள்ளது. இதனால் தீவன பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை சரி செய்ய கால்நடைகளுக்கு மாற்று தீவனமாக அசோலா செடியை பயன்படுத்தலாம். இதன் மூலம் உற்பத்தி திறனை அதிகரித்து தீவன தட்டுப்பாட்டை சரி செய்யலாம் என கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.இது குறித்து அவர்கள் தெரிவிக்கையில்,” அசோலா பெரணி வகையை சேர்ந்த மிதவை செடி. இது நீரின் மேற்பரப்பில் வளரும். இப் பயிரை கால்நடைகளுக்கு பச்சையாகவோ, உலர் நிலையிலோ தரலாம். அசோலாவில் 50 முதல் 60 சதவீதம் புரத சத்து, பீட்டா கரோட்டின் அமிலம் மற்றும் தாது உப்பு உள்ளது. இதனை கறவை மாடுகளுக்கு வழங்கினால் பாலின் கொழுப்பு சத்து 10 சதவீதம் அதிகாரிக்கும். அதே போல் கொழுப்பு அல்லாத திடப்பொருளின் அளவு 3 சதவீதம் அதிகரிக்கும். தவிர பாலின் உற்பத்தி 10 முதல் 20 சதவீதம் அதிகரிக்கும். கோழிகளுக்கு தீவனமாக வழங்கும் போது கோழிகள் விரைவில் வளரும். அசோலாவை நன்கு கழுவிய பின்பு

கறவை மாடுகளுக்கு உணவாக அளிக்க வேண்டும். கறவை மாடுகளுக்கு முதன் முதலில் அசோலாவை பயன்படுத்தும் போது அடர் தீவனம் ஒரு பங்கும், அசோலா ஒரு பங்கு கலந்து தர வேண்டும். நன்கு பழகிய பின்னர் அசோலாவை தனியாக தரலாம். பசுந்தீவன பற்றாக்குறையை சமாளிக்க புரதசத்து மிக்க அசோலாவை உற்பத்தி செய்து நிரந்தர மாட்டு தீவனமாக பயன்படுத்தலாம்" என்றனர்.